Registered as a Newspaper

சிக்மா பம்ப்ஸ்
(CEYGMA PUMPS)
-நம்பிக்கையானவை
-நீடித்து உழைப்பவை
யுனைரெட் அக்ரோ
என்ஜினியரிங்
274|1, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 22747

# உதயன்

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

விலை ரூ-1/=

பண்ணெண்ணெயில்
இயங்கும்
உலகப் பிரசித்திபெற்ற
இங்கிலிஷ் வில்லியர்ஸ்
பொருத்தப்பட்ட
2'' ஜூனியர்
மின்சாரத்தில் இயங்கும்
அமெரிக்கன் மோட்டர்
1 H.P., 1 1|2 H.P.
பொருத்தப்பட்ட
சிக்மா பம்ப்ஸ்
தற்பொழுது விற்பனையாகின்றன.

சுடர்:- 1 யாழ்ப்பாணம் குரோதன ஆடு தை மீ உ 23 புதன்கிழமை ஹிஜ்ரி 1406 ரபி. ஐ. அவ். பிறை 25 (05:02:1986) UTHAYAN — A LIVELY TAMIL DAILY கதிர்:68

# போராளிகளின் முழுப் பலமும் திரட்டப்படுகிறது

## எதிர்த் தாக்குதல் நடக்கும் என்று ரெலோ அறிவிப்பு

சென்னை, பெப். 4

எதிரிகள் என்றும் நினைத்துப்பாராத வகையில் எதிர்த் தாக்குதலை நடத்துவதற்குப் போராளிகள் முழுப் பலத்தையும் திரட்டியுள்ளார்கள்.

இவ்வாறு தமிழ் ஈழவிடுதலை இயக்கம் (ரெலோ) சென்னையில் விடுத்த அறிக்கை ஒன்றில் கூறியுள்ளது.

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணும் அக்கறை இலங்கை அரசுக்கு இல்லை. இராணுவத் தீர்வு பற்றியே ஜெயவர்த்தன அரசு கூறுகின்றது.

அவரின் யுத்த அழைப்பை ஏற்றுப் போராடத் தமிழ் மக்கள் தயாராக உள்ளார்கள்.

எதிரிகள் என்றும் கண்டிராத வகையில் எதிர்த்தாக்குதல் நடத்தப் போராளிகள் தயாராக இருக்கின்றார்கள்.

இப்படி தமிழ் ஈழ விடுதலை இயக்க விடுத்த அறிக்கையில் கூறப்பட்டு உள்ளது.

## வடக்கில் நேற்று சாதாரண நாள்

நல்லூர், பெப். 5

இலங்கையின் 38 ஆவது சுதந்திரதினமான நேற்று யாழ் நகரப் பகுதியில் வழமையான சாதாரண நாள் உணர்வே தென்பட்டது.

சில வீடுகளில் கறுப்புக் கொடிகள் பறக்கவிடப் பட்டிருந்தன.

கடைகள் யாவும் திறக்கப்பட்டு வழமைபோல் வியாபாரங்கள் நடைபெற்றன.

இ. போ. ச. பஸ்கள் தனியார் பஸ்கள் போன்றவை வழமைபோல் சேவையில் ஈடுபட்டிருந்ததையும் காணக்கூடியதாக இருந்தது.

தனியார் கல்வி நிறுவனங்களுக்கும் மாணவர்கள் வழமைபோல் வந்து போனார்கள்.

மினிசினிமாத் திரையரங்குகளிலும் மூன்று நேரக் காட்சிகளும் காண்பிக்கப்பட்டன.

## 45 அடி நீளத்துக்கு தண்டவாளம் அபேஸ்
### மட்டக்களப்பு ரயில்நிறுத்தம்

மட்டக்களப்பு, பெப். 5

ஏறுவூருக்கும் வாழைச்சேனைக்கும் இடையில் வந்தாறுமூலையில் 45 அடி நீளத்திற்கு ரயில் தண்டவாளம் அகற்றப்பட்டிருந்தது

இதனையடுத்து மட்டக்களப்புப் பகுதியில் ரயில்சேவைகள் அனைத்தும் ரத்துச் செய்யப்பட்டன.

மட்டக்களப்பில் சுதந்திரதினமான நேற்று பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது

ரயில் தண்டவாளம் அகற்றப்பட்டதை அடுத்து கொழும்பிலிருந்து வந்த உதயதேவி பொலன்னறுவையுடன் திருப்பி அனுப்பப்பட்டது.

# மலையகத்தில் விகாரைகள் மீதும் தாக்குதல்

## விசாரணை நடத்த முடியாது நீதிவான் திரும்பிச் சென்றார்

— கொழும்பிலிருந்து சிறப்புச் செய்தியாளர் —

கொழும்பு, பெப். 5

மலையகத்தில், சுதந்திர தினமான நேற்றும் வன்செயல்களும், தாக்குதல்களும் தொடர்ந்து நடந்தன.

பொகவந்தலாவையில் மூன்று விகாரைகள் உட்பட சிங்கள மக்களுக்குச் சொந்தமான பல வீடுகள் தாக்கப்பட்டதாகவும் அறியவந்துள்ளது.

பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த இரண்டு பேர் கொல்லப்பட்டதாகவும் அறிவிக்கப்படுகிறது.

இதேவேளை இறந்தவர்களின் மரணம் தொடர்பாக விசாரணை நடத்தச் சென்ற மாஜிஸ்திரேட் ஒருவரும் இடைவழியில் மறிக்கப்பட்டு மிரட்டப் பட்டதாகக் கூறப்படுகிறது.

இதனையடுத்து மாஜிஸ்திரேட் விசாரணை நடத்தாமலேயே இடைவழியில் திரும்பினார்.

ஹட்டனில் சிங்களவர் குடியேற்றமான காமினிபுர இனந் தெரியாத கோஷ்டி ஒன்றினால் நேற்று அதிகாலை தாக்கப் பட்டது.

சுமார் 250 பேர் கொண்ட கோஷ்டி ஒன்று இத்தாக்குதல் முயற்சியை மேற்கொண்டதாகக் கூறப்படுகிறது

இவர்கள் வெள்ளை பெனியனும் அரைக் காற்சட்டையும் அணிந்திருந்தனர்.

தாக்குதல் சம்பவத்தை அறிந்து பாதுகாப்பு படையினர் அங்கு விரைந்து துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாகக் கூறப்படுகிறது.

துப்பாக்கிப் பிரயோகத்தை அடுத்து மலைக்கு மேலே ஓடிச் சென்று கோஷ்டியினர் அங்கிருந்து படைவீரர்களை

(4 ஆம் பக்கம் பார்க்க)

## வணக்க ஸ்தலங்களை இழிவுபடுத்தும் படையினர்

மட்டக்களப்பிலிருந்து மகஜர்

மட்டக்களப்பு, பெப். 5

மட்டக்களப்பில் ஆயுதப்படை சிப்பாய்களினால் வணக்க ஸ்தலங்கள் இழிவுபடுத்தப்படுவதையும், மதகுருமார் அவமரியாதை செய்யப்படுவதையும் ஆட்சேபித்து ஜனாதிபதிக்கு மகஜர் ஒன்று அனுப்பப்படவிருக்கிறது.

மட்டக்களப்பில் கிறிஸ்தவ - இந்துமத குருமார் ஒன்றிணைந்து இந்த மகஜரை அனுப்ப ஏற்பாடு செய்திருக்கிறார்கள்.

மகஜரில் பின்வரும் விடயங்கள் பற்றி கண்டனம் தெரிவிக்கப்பட்டிருக்கிறது:-

* கடந்த 19 ஆம் திகதி இருதயபுரப் பகுதியில் தேடுதல் நடத்தப் பட்டபோது இருதயபுரம் தேவாலயத்தில் 300 பேர் தடுத்து வைக்கப்பட்டனர்.

தேவாலய பணியாளர்கள் மூவர் அங்கு வைத்துக் சுட்டுக் கொல்லப் பட்டார்கள்.

தேவாலய பங்குத்தந்தையை சிப்பாய்கள்

(4 ஆம் பக்கம் பார்க்க)

### சுபநேரம்

5.2.1986

புதன்கிழமை

சுபநேரம்:
5.05 முதல் 6.35 வரை

ராகுகாலம்:
12 35 முதல் 2.05 வரை

இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

ஏகாதசி விரதம்

# மட்டுநகரில் நேற்று பூரண ஹர்த்தால்

## தேசியக் கொடிகள் மாயமாய் மறைந்தன!

மட்டக்களப்பு, பெப். 5

சுதந்திரதினத்தை ஒட்டி மட்டக்களப்பு பகுதியில் ஹர்த்தால் அனுட்டிக்கப்பட்டது.

திங்கட்கிழமை இரவு முதல் நேற்றுக் காலை வரை குண்டு வெடிச் சத்தங்கள் நகரில் கேட்ட வண்ணம் இருந்தன.

ஆயுதப் படையினர் நள்ளிரவில் இருந்து பாதுகாப்பு ஏற்பாடுகளைப் பலப்படுத்தியிருந்தனர்.

காத்தான் குடி, ஒட்டமாவடிப் பகுதிகளில் மட்டுமே சில கடைகள் திறக்கப்பட்டு இருந்தன. ஏனைய இடங்களில் எல்லாம் கடைகளில் பூட்டுகள் தொங்கின.

### ரயில் பஸ் சேவை ஸ்தம்பிதம்

ஏறுவூர், செங்கலடி, வாழைச்சேனை ஆகிய இடங்களிலும் ஹர்த்தால் நடத்தப்பட்டது.

தனியார் பஸ் சேவை அறவே நடைபெற

(4 ஆம் பக்கம் பார்க்க)

முச்சந்திமுரளி



அப்ப இனி, மலை நாடும் வடக்கு, கிழக்கு நிலைக்கு மாறினாலும் ஆச்சரியப் படுறதுக்கு இல்லை. சுடுறதுக்கு உத்தரவு வந்தால் தோட்டத் தொழிலாளரும் 'பயங்கரவாதியளா' மாத்தப்படுவினம். அது நிச்சயம்.

# மூதூரிலும் மோதல்கள்

யாழ்ப்பாணம். பெப். 5

மூதூர் பகுதியில் ஆயுதப் படையினருக்கும் போராளிகளுக்குமிடையில் நேற்று தொடர்ந்து மோதல் நிகழ்ந்தது.

பல இடங்களில் படைச் சிப்பாய்களினால் போராளிகள் சுற்றிவளைக்கப் பட்டதாகவும்-

எனினும் போராளிகள் எதிர்த்தாக்குதல் நடத்தியதாகவும் தெரிய வருகிறது

நேற்றைய தாக்குதலில் இறந்தவர்கள் பற்றிய விவரம் எதுவும் செய்தி அச்சுக்குப் போகும்வரை தெரியவில்லை.

நேற்று முகாமிலிருந்து சம்பூர் பகுதியை நோக்கி கவச வாகனங்களிலும் பஸ்களிலும் தேடுதல் வேட்டைக்குப் புறப்பட்ட ஆயுதப்படையினரை நோக்கிப் போராளிகள் தாக்குதல் நடத்தியதாகக் கூறப்படுகிறது.

ஆயுதப்படையினர் திருப்பித் தாக்கியதாகவும்-

விமானங்கள் தாழப் பறந்து சரமாரியாக வேட்டுகளைத் தீர்த்ததாகவும் தெரிகிறது.

### ஊரடங்கு நீக்கம்

கொழும்பு, பெப். 5

மலையகத்தின் பலபகுதிகளில் அமுல் செய்யப்பட்டிருந்த ஊரடங்குசட்டம் நீக்கப்பட்டுவிட்டது.

### செய்திச் சாரம்

#### பாரபட்சமின்றி சுட உத்தரவு

கொழும்பு, பெப். 5

மலையகத்தில் கலகம் விளைவிப்போரை பாரபட்சமின்றி சுடுமாறு பொலீஸ் மா அதிபர் பொலீஸாருக்கு உத்தரவிட்டிருக்கிறார்.

#### ஏற்றலும் இறக்கலும்

யாழ்ப்பாணம், பெப். 5

யாழ்ப்பாணத்தில் சுதந்திரதின நிகழ்ச்சி எதுவும் பெரிதாக நடக்கவில்லை.

சில அரசாங்க அலுவலகங்களில் அதிகாரிகள் காலையில் தேசியக் கொடியை ஏற்றினர்.

எனினும் இளைஞர் கோஷ்டிகள் விரைந்து அவற்றைக் கழற்றிவிட்டன.

#### தமிழ் ஆசிரியர்கள் எங்கே?

திருகோணமலை, பெப். 5

பாதுகாப்புப் படையினரால் அழைத்துச் செல்லப்பட்ட இரண்டு தமிழ் ஆசிரியர்கள் பற்றி தகவல் எதுவும் இடைக்கவில்லை என்று திருமலை பிரஜைகள் குழு விடம் முறையிடப் பட்டுள்ளது.

திரு. எஸ். குழந்தைவேலு, திரு பத்திநாதன் சித்திரவேலு ஆகியவர்கள்தான் கடந்த 29ஆம் திகதி பாதுகாப்புப் படையினரால் அழைத்துச் செல்லப்பட்டவர்கள் ஆவர்.

### இரு அதிகாரிகளும் இருக்கிறார்கள்

கொழும்பு, பெப். 5

முல்லைத்தீவு மேலதிக அரசாங்க அதிபர் திரு. எஸ். தெய்வசிகாமணியும், செயலக கணக்காளர் கே. சௌந்தரலிங்கமும் சுகமாக இருப்பதாகக் கொழும்புக்குக் கிடைத்த செய்திகள் தெரிவிக்கின்றன.

முல்லைத்தீவிலிருந்து சுமார் ஆறு மைல் தொலைவிலுள்ள முள்ளியவளையில் ஒரு வீட்டில் இருவரும் தற்போது இருப்பதாக உத்தியோகபூர்வ வட்டாரங்கள் ஊர்ஜிதம் செய்தன.

முல்லைத்தீவில் போராளிகளுக்கும் ஆயுதப் படையினருக்கும் இடையில் நடந்த மோதலைத் தொடர்ந்து இவர்கள் இருவரும் காணாமல் போனதாக அஞ்சப் பட்டது.

## கிளிநொச்சியில் 4 நாள் மோதல்

# 29 சிப்பாய்கள் மரணம்

## இரு ஹெலிக்கொப்டர்கள் சேதம்

### விடுதலைப் புலிகள் அறிவிப்பு

சென்னை, பெப். 4

கிளிநொச்சிப் பகுதியில் கடந்த வியாழக்கிழமை தொடக்கம் நான்கு நாட்கள் தொடர்ந்து நடந்த மோதல்களில் ஒரு லெப்டினன் உட்பட 29 சிப்பாய்கள் கொல்லப்பட்டனர். ஒரு கிறெயினும் ஐந்து கவச வாகனங்களும் சேதப் படுத்தப்பட்டன.

தமிழீழ விடுதலைப் புலிகள் சென்னையில் விடுத்த அறிக்கை ஒன்றில் இப்படித் தெரிவித்திருக்கிறார்கள்.

கிளிநொச்சியில் தர்மபுரம், வட்டக்கச்சி, விசுவமடு ஆகிய இடங்களில் இந்த மோதல்கள் நடந்தன.

உயிரிழந்த லெப்டினன் மாத்தறையைச் சேர்ந்தவர்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

இந்தத் தாக்குதல்களில் இரண்டு ஹெலிக்கொப்டர்கள் சேதப்படுத்தப்பட்டன.

ஒரு ஹெலிக்கொப்டர் தாக்கப்பட்டதையடுத்து கல்மடுப்பகுதியில் தரையிறக்கப்பட்டது.

30 ஆம் திகதி சம்பவத்தில் லெப்டினன் ஒருவர் உட்பட 6 சிப்பாய்களும்-

31 ஆம் திகதி சம்பவத்தில் ஐந்து சிப்பாய்களும்-

முதலாம் திகதி சம்பவத்தில் நான்கு சிப்பாய்களும்-

இரண்டாம் திகதி அதிகாலைச் சம்பவத்தில் இரண்டு சிப்பாய்களும் சம்பவம் நடந்த இடத்திலேயே மரணமானார்கள்.

படுகாயமடைந்த 12 சிப்பாய்கள் கொழும்பு இராணுவ வைத்திய சாலைக்கு கொண்டு செல்லப்பட்டு அங்கு மரணமாகினர்.

படுகாயமடைந்த 11 சிப்பாய்கள் கொழும்பில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

மரணமானவர்களும் படுகாயமடைந்தவர்களும் கூட்டு பாதுகாப்புப் படையைச் சேர்ந்தவர்கள்.

தர்மபுரப் பகுதியில் வைத்துக் கடத்தப்பட்ட 55 பொதுமக்கள் படைச் சிப்பாய்களினால் கோரமான முறையில் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

நான்கு நாட்கள் தொடர்ந்து அறுநூறுக்கும் மேற்பட்ட சிப்பாய்களுடன் எமது போராளிகள் நேரடியாக மோதினர்.

96 மணி நேர போரில் போராளிகள் மன உறுதியுடன் போராடி கூட்டு ஆயுதப்படையை பின்வாங்கச் செய்தனர்.

கூட்டு ஆயுதப் படையை பின்வாங்கச் செய்தது இதுவே முதல் தடவை.

இந்தப் போரில் எமது போராளிகள் இருவர்

(4 ஆம் பக்கம் பார்க்க)

# முல்லைத்தீவில் முகாமிலிருந்து வெளியே வந்து தாக்குதல்

## மற்றொரு பீரங்கிக் கப்பலும் வந்தது

முல்லைத்தீவு, பெப். 5

கடந்த சில நாட்களாக முகாமுக்குள் முடங்கிக் கிடந்த வண்ணம் தாக்கிய ஆயுதப்படையினர் ஒன்பதாவது நாளான நேற்று வெளியே வந்தனர்.

விமானங்கள் மேலே பாதுகாப்பளிக்கக் கவச வாகனங்களில் மூன்று மைல் தூரம் சென்றனர்.

ஹெலிக்கொப்டரிலிருந்தும் கவச வாகனங்களிலிருந்தும் சரமாரியாகச் சுடப்பட்டதாக அறியப் படுகின்றது.

அதனால் பலர் காயம் அடைந்து புதுக்குடியிருப்பு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள். படுகாயம் அடைந்தவர்கள் சிலர் கிளிநொச்சி வைத்தியசாலையிலும், யாழ்ப்பாண அரசினர் வைத்தியசாலையிலும் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள்

நேற்றுக் காலையிலிருந்து இரண்டு ஹெலிக்கொப்டர் விமானங்கள் முகாமைச் சுற்றியுள்ள சில பகுதிகளில் சரமாரியாகக் குண்டுகளால் தாக்கின. போராளிகள் ஹெலிக்கொப்டர் விமானத்தை நோக்கி றொக்கெட் லோஞ்சர் மூலம் தாக்கினர்.

நேற்று மாலை மேலும்

(4-ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின[ர் விரும்பும்] இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 'ஜனனி' நாயகனுக்கு அடித்த 'சான்ஸ்'
### அவரே கூறுகிறார்

ஜெமினியின் "ஜனனி" படத்தின் கதாநாயகனை நடித்தவர் உதயகுமார். முதற் படத்திலேயே கதாநாயகனை நடித்து புகழ் தேடி விட்டார் அந்த இளைஞர்.

அவர் படவுலகில் புகுந்த அதிசயத்தைக் கூறுகிறார்:

'கோயம்புத்தூரில் படிப்பை முடித்து விட்டு, எல்லோரையும் போல நானும் வேலை தேடும் படலத்தை ஆரம்பித்தேன். கோயம்புத்தூரில் எந்தவொரு வாய்ப்பும் கிடைக்கவில்லை.

பிறகு சென்னைக்கு வந்தேன். வேலைதேடித் திரிந்தேன். அத்துடன் நிறைய படங்களையும் பார்த்து பொழுதைப் போக்கினேன்.

ஒரு நாள் சபையர் தியேட்டர் முன்னால் நின்று பட பேனரைப் பார்த்துக் கொண்டிருந்தேன். அப்போது என் தோளில் ஒரு கை விழுந்தது. திரும்பிப் பார்த்தேன். திடகாத்திரமான ஒருவர் நின்று கொண்டிருந்தார்.

அவரை ஏற்கனவே எங்கோ பார்த்ததைப் போல் இருந்தது. யோசித்தேன். நினைவுக்கு வந்தார் அவர்.

அவர் வேறு யாருமல்ல "உன்னை விட மாட்டேன்" படத்தில் கதாநாயகனை நடித்தநேதாஜிதான்.

முதல் வார்த்தையாக "என்னப்பா நடிக்கிறியா?" என்று கேட்டார். நான் திக்குமுக்காடிப் போனேன். எப்படி என்னிடம் இருந்து மறுப்பு வரும்? தலையாட்டி விட்டேன்.

உடனேயே ஜெமினி அதிபர் மதிப்பிற்குரிய பழனியப்பன் ராமசாமி அவர்களைப் பார்க்க அழைத்துச் சென்றார்.

அறிமுகம் நடந்தது. அவர் என்னைப் பார்த்த ஒரே பார்வையில் "ஓகே செய்யட்டும்" என்று கூறிவிட்டார். கற்பனை வானில் சிறகடித்துப் பறக்கத் தொடங்கி விட்டேன்.

ராதாகிருஷ்ணன் என்ற எனது பெயர் மாற்றப்பட்டு, ஜனனி படத்தின் அசோசியேட் டைரக்டர் உதயகுமாரின் பெயர் சூட்டப்பட்டது.

ஒப்பனைத் தேர்வின் போது நேதாஜிதான் எனக்கு எல்லாமே சொல்லிக் கொடுத்தார் அத்துடன் அறிவுரைகளையும் ஆலோசனைகளையும் வழங்கினார்.

இந்த இன்ப அதிர்ச்சியை வீட்டிற்குச் சென்று கூறினேன். ஒருவருமே நம்பவில்லை பிறகு உண்மை புரிந்து விட்டது.

'நல்ல சந்தர்ப்பம், இனி பயன்படுத்திக் கொள்வது உன்னிடம் தான் இருக்கிறது. சிறப்பாகச் செய்!' என்று எல்லோரும் ஆசி கூறினார்கள்.

அவர்கள் எதிர்பார்த்தபடி சிறப்பாகச் செய்தேன். படமும் வெற்றி பெற்று விட்டது' என்றார்.

தினசரி சினிமா

தென்னாபிரிக்காவில் இன ஒதுக்கல்

# பெரும் கலவரம் வெடிக்கும்?

## ஸாம்பிய அதிபர் எச்சரிக்கை

லூஸாக்கா, பெப். 4

தென்னாபிரிக்க இன ஒதுக்கலினால் பெரும் கலவரம் வெடிக்கலாம்.

எந்த ஒரு தருணத்திலும் வெடிக்கும் எரிமலைதான் தென் ஆபிரிக்கா.

இனஒதுக்கலை நிறுத்தாவிட்டால் இந்த எரிமலை வெடித்து பெரும் நாசத்தை ஏற்படுத்தும்.

இப்படி ஸாம்பியா நாட்டு அதிபர் கென்னத் கவுண்டா எச்சரிக்கை விடுத்திருக்கின்றார்.

கறுப்பு இனமக்களின் ஆட்சி நடைபெறும் 6 தென் ஆபிரிக்க நாடுகளுக்கும் ஐரோப்பிய பொருளாதார சமூகத்துக்கும் இடையே நடந்தமாநாடு ஒன்றுக்கு தலைமை வகித்துப் பேசுகையிலேயே திரு. கென்னத் கவுண்டா மேற்கண்ட எச்சரிக்கையை விடுத்தார்.

தென்னாபிரிக்கா மீது விரிவான பொருளாதாரத் தடை விதிக்க சர்வதேச நாடுகள் தீவிரமாக நடவடிக்கை எடுக்க வேண்டும் — என்றும் திரு. கவுண்டா சொன்னார்.

பிராந்திய நாடுகளிடையே பூசல்களைத் தவிர்க்க இனவேறுபாடுகளைஅகற்றுவதற்கு தீவிரமான நடவடிக்கைகளை மேற்கொள்ளும்படிதென் ஆபிரிக்காவைக் கேட்டுக் கொள்ளும் தீர்மானம் மாநாட்டில் நிறைவேற்றப்பட்டது.

தென் ஆபிரிக்காவுக்கு எதிராக பக்கத்துநாடுகள் புது உத்தி ஒன்றைக் கையாளுவது என்றும் மாநாட்டில் முடிவு செய்யப்பட்டது.

இதனிடையில் ஆபிரிக்க நாடுகள் சங்கத்தின் வேண்டுகோளுக்கு இணங்க ஐ. நா. பாதுகாப்புச்சபை பெப்ரவரி 5-ஆம் திகதி கூடுகிறது.

தென்ஆபிரிக்கா தனது பக்கத்து நாடுகளுக்கு எதிராக எடுக்கும் நடவடிக்கைகளைக் கண்டிக்கும் தீர்மானம் ஒன்றும் ஐ. நா. பந்தோபஸ்து சபைக்கூட்டத்தில் நிறைவேற்றப் படும் என்று தெரிகிறது.

அதே நேரத்தில், அங்கோலாவில் அரசுக்கு எதிராக தென் ஆபிரிக்க அரசின் ஆதரவுடன் கிளர்ச்சிநடத்தும் கெரில்லாப் படைத் தலைவர்கள் அமெரிக்கஅதிபர்றேகனை வாஷிங்டனில் சந்தித்துள்ளனர்.

### சுந்தர்ஜி புதிய இராணுவ தளபதி

புதுடில்லி, பெப். 4

இந்தியாவின் புதிய இராணுவத் தளபதியாக ஜெனரல் கிருஷ்ணசாமி சுந்தர்ஜி கடந்த 31ஆம் திகதி பதவி ஏற்றார்.

ஏற்கனவே தளபதியாக இருந்தவர் ஜெனரல் ஏ. எஸ். வைத்தியா.

அவர் ஓய்வு பெற்றதைத் தொடர்ந்து ஜெனரல் சுந்தர்ஜி பதவி ஏற்றுள்ளார்.

"மரபுரீதியிலான யுத்தத்தை மட்டுமல்ல, அணுரீதியிலான மிரட்டலையும் சமாளிக்கும் வல்லமை இந்திய இராணுவத்துக்கு உண்டு"– இப்படி புதிய தளபதி ஜெனரல் சுந்தர்ஜி சொன்னார்.

### தென்யேமன் வழமை நிலைக்கு திரும்புகிறது

மனாமா, பெப். 4

தென் யேமனில் நிலைமை வழமைக்குத் திரும்புகிறது.

ஆளும் யேமன் சோஷலிசக் கட்சி வட்டாரங்கள் இதனைத் தெரிவித்தன.

உள்நாட்டுச் சண்டை ஏற்பட்டதினால் சீர்கெட்டு இருந்த சகல பொது சேவைகளும் படிப்படியாக சீரடைந்து வருகின்றன.

இப்போது சோஷலிசக் கட்சியின் கூட்டுத் தலைமை தென்யேமனின் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றி உள்ளது.

## விசாரணைக் கமிஷனில் நீல் ஆம்ஸ்ரோங்

வாஷிங்டன், பெப் 4

சந்திரனில் முதன் முதல் காலடி எடுத்து வைத்த விண்வெளி வீரர் நீல் ஆம்ஸ்ரோங், 'சலஞ்ஜர்' விபத்துபற்றி ஆராயும் கமிஷனில் இடம் பெற்றுள்ளார்.

ஜனவரி 28இல் 'சலஞ்ஜர்' விண்கலம் நடுவானில் வெடித்துச் சிதறியதும்–

அதில் பிரயாணம் செய்த ஏழு வீரர்களும் கொல்லப்பட்டதும் தெரிந்ததே.

இந்த விபத்து பற்றி ஆராய்வதற்கு அமெரிக்க அதிபர் றேகன் நேற்று உயர் ஆணைக்குழு ஒன்றை நியமித்துள்ளார். இக்குழுவின் தலைவராக முன்னாள் வெளிநாட்டு அமைச்சர் வில்லியம் ரோஜர்ஸ் நியமிக்கப்பட்டிருக்கிறார்.

மற்ற உறுப்பினர், சந்திரனில் முதன்முதலில் காலடி எடுத்து வைத்த விண்வெளி வீரர் நீல் ஆம்ஸ்ரோங்.

நான்கு மாதங்களில் குழு அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும் என்று அமெரிக்க அதிபர் உத்தரவிட்டுள்ளார்.

வெளி உலகில்

## விசர் நாய்க் கடி மருந்து; மலேரியா நோயாளிக்கு பலன் தராதாம்

பொஸ்டன், பெப் 4

விசர் நாய்க் கடிக்கு பாவிக்கப்படும் முக்கிய மருந்து, மலேரியா நோய்க்குச் சிகிச்சை பெறுபவருக்குச் செலுத்தினால் பயனளிக்காது.

அமெரிக்க வைத்திய ஆராய்ச்சியாளர்கள் இதனைக் கண்டு பிடித்துள்ளனர்.

குளோரகுயின் என்ற மலேரியாத் தடுப்பு மருந்தைப் பாவிப்பவர்களுக்கு விசர் நாய்க் கடிக்கான மருந்து கொடுத்தால் அது பலனளிக்காது.

51 மாணவர் மீது நடத்தப்பட்ட பரிசோதனையில் இருந்து இது தெரியவந்திருக்கிறது.

## பிலிப்பீன்ஸ் தேர்தல் சூடு பிடித்திருக்கிறது

மணிலா, பெப். 4

பிலிப்பீன்ஸ் நாட்டில் ஜனாதிபதி தேர்தல், சூடு பிடித்துள்ளது

இதுவரை 47 பேர் கொல்லப்பட்டிருக்கிறார்கள். ஆயிரக் கணக்கானோர் காயமடைந்தனர்.

இப்படி பிலிப்பீன்ஸ் பொலீஸ் அதிபர் ஜெனரல் ரோமோ அறிவித்தார்.

1984 இல் நடந்த நாடாளுமன்றத் தேர்தல் பிரசாரத்தின் போது 900 பேர் வரையில் கொல்லப்பட்டனர்.

1981 இல் நடந்த ஜனாதிபதி தேர்தலில் 180 பேர் வரையில் கொல்லப்பட்டனர்.

ஜனாதிபதி தேர்தலில் மோசடிகள், ஆள்மாறாட்டங்கள் இடம் பெறுவதை பொலீஸார் தடுப்பர்.

நீதி சுதந்திரம் உள்ள தேர்தலையே தாமும் விரும்புவதாக பொலீஸ் அதிபர் ஜெனரல் ரோமோ சொன்னார்.

### ஐவருக்கு மரண தண்டனை

பக்தாத், பெப் 4

லஞ்சம், தஸ்தாவேஜு மோசடிக் குற்றங்களுக்காக ஐந்து ஈராக் வாசிகளுக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டது.

ஈராக் இராணுவ நீதிமன்றம் இத் தண்டனையை விதித்ததாக பக்தாத் டெலிவிஷன் நிலையம் அறிவித்தது.

### ராஜதந்திரிகளை வெளியேற்ற உத்தரவு

மாஸ்கோ, பெப் 4

நான்கு பிரஞ்சு ராஜதந்திரிகளை வெளியேறும் உத்தரவை ரஷ்யா பிறப்பித்துள்ளது.

வாரமுடிவினுள் வெளியேற வேண்டும் என்று ரஷ்யா அவர்களுக்கு உத்தரவிட்டு உள்ளது.

கடந்த வாரம் பிரஞ்சு அரசு, உளவு வேலைகளில் ஈடுபட்டதாகக் கருதப்படும் 4ரஷ்யர்களை வெளியேற்றியதற்குப்பதில் நடவடிக்கையாகவே, ரஷ்யா இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளது.

## திம்பு யோசனைக்கும் தற்போதைய பதிலுக்கும் வித்தியாசம் இல்லை

சென்னை, பெப் 4

இலங்கை அரசின் திம்பு நகல் திட்ட யோசனைகளுக்கும், கூட்டணியின் மாற்று யோசனைகள் சம்பந்தமாக அளிக்கப்பட்ட பதிலுக்கும் எதுவித வித்தியாசமுமே இல்லை என்று தெரியவந்துள்ளது.

இலங்கைஅரசு முதலில் சமர்ப்பித்த நகல் திட்டயோசனைகளில் மாவட்ட சபைகள் விரும்பினால் மட்டுமே மாகாண சபைகள் என்ற அம்சம் வலியுறுத்தப் பட்டிருந்தது.

இதுவே, கூட்டணியின் மாற்றுயோசனைகளுக்கான பதிலிலும் வலியுறுத்தப்பட்டிருந்ததாகத் தெரியவருகின்றது.

## யாழ் மாவட்ட பாடசாலைகளுக்கு பாடநூல்கள் வந்தன

யாழ்ப்பாணம், பெப். 5

யாழ் மாவட்ட பாடசாலைகளுக்கு வழங்கவென இரண்டு லட்சத்து ஐம்பதாயிரம் இலவச பாடப் புத்தகங்கள் கொண்டு வரப்பட்டு உள்ளன.

பதிப்பாசிரியர்களில் ஒருவரான திரு ஐ. தம்பிமுத்து இந் நூல்களைக் கொழும்பிலிருந்து கொண்டு வந்தார்.

போக்குவரத்துச் சேவை தடைப்பட்ட காரணத்தால் இவற்றைத் தருவிப்பதில் தாமதம் ஏற்பட்டதாகக் கல்வித் திணைக்கள வட்டாரம் தெரிவித்தது. வட பிரதேச கல்விப் பணிப்பாளர் திரு. எம். சிமியாம்பிள்ளை ரயில்வே திணைக்களத்துடன் தொடர்பு கொண்டு இதற்கு ஏற்பாடு செய்தார். வடமாகாணப் பாடசாலைகளின் தேவை பத்து லட்சம் பாடநூல்கள் என்று கணிக்கப்பட்டு உள்ளது. இவற்றையும் விரைவில் தருவிக்க நடவடிக்கை எடுப்பதாக தெரிவிக்கப்பட்டது.

### மட்டக்களப்பில் ஹெலிக் கொப்டர் சூடு

மட்டக்களப்பு, பெப். 5

மட்டக்களப்பில், கரு கம்பன்கேணிப் பகுதியில் திங்கள் பகல் ஹெலிக் கொப்டரில் இருந்து சுடப்பட்டது.

மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்தவர்கள் மீதே துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டது.

அவர்கள் தப்பிச் சென்றுவிட்டனர் என்று சொல்லப்படுகிறது.

### நிர்வாகி விளக்கம்

யாழ்ப்பாணம், பெப். 5

பத்து லட்சம் கையொப்பம் சேகரிக்கும் இயக்க ஆரம்ப நாளான கடந்த சனிக்கிழமை (1–2–86) முதலில் கையொப்பமிட்ட ஏழுபேரில் பிரம்ம ஸ்ரீ கைலாசநாதக் குருக்களும் ஒருவர் ஆவார்.

உதயன் செய்தியில் வெளியாகி இருந்தது போல பிரம்மஸ்ரீ கைலாசநாதக்குருக்கள் வண்ணை வைத்தீஸ்வரன் கோயிலை சேர்ந்தவர் அல்லர் என்று அந்த கோயிலின்நிர்வாகி அறிவிக்கிறார்.

மினி சினிமா

நவா மினி
(உஷா மினி முன்பாக)
* புதிய வெளியீடு
The Dirty Dozen
NEXT MISSION
வயது வந்தவர்களுக்கு மட்டும்
முழுக்க, முழுக்க தாக்குதல் நிறைந்த மிகச் சிறந்த படம்,
முதன் முதலாக எமது மினியில் மட்டுமே காண்பிக்கப்படுகிறது.

மாநிலம்-மாவட்டம்-உள்ளூர்

# தனியார் சுகாதார நிலையம்

## கிராமந்தோறும் திறப்பது வரவேற்கத்தக்கது

### ஆனைக்கோட்டையில் டாக்டர் உரை

யாழ்ப்பாணம், பெப். 5

இன்றைய நெருக்கடி நிலையைச் சமாளிக்க கிராமந் தோறும் தனியார் சுகாதார நிலையங்கள் திறக்கப்படுவது வரவேற்கத்தக்கது.

இதனால் சிறு வருத்தங்களுக்கும் பெரிய ஆஸ்பத்திரிகளைத் தேடி ஓட வேண்டிய தேவை ஏற்படாது.

சாதாரண இருமலுக்கும் தடிமனுக்கும் ஆஸ்பத்திரிகளுக்குச் செல்வதை மக்கள் தவிர்க்க வேண்டும். வீட்டுவைத்தியம் மூலம் இதனைச் சுகப்படுத்த முயற்சிக்க வேண்டும்.

இப்படி டாக்டர் எஸ். சிவானந்தராஜா சொன்னார்.

வட இலங்கை தனியார் மருத்துவக்கல்லூரி கவுன்ஸில் உறுப்பினரான டாக்டர். சிவானந்தராஜா, ஆனைக்கோட்டையில் கடந்த சனிக்கிழமை ஆரம்ப சுகாதார நிலையம் ஒன்றைத் திறந்துவைத்தார்.

டாக்டர் சிவானந்தராஜா மேலும் சொன்னதாவது;

வீட்டுவைத்தியம்மூலம் சிறுவருத்தங்களைச் சுகப்படுத்த முயலவேண்டும். முடியாவிடின் ஆஸ்பத்திரிகளை நாடலாம். இந்த நடைமுறையை அனுட்டிப்பதன் மூலம் நெருக்கடியான இன்றைய காலகட்டத்தில் ஆஸ்பத்திரிக்குச் செல்வதைக் குறைத்துக் கொள்ளலாம்.

முதலுதவிச் சிகிச்சைகள் பற்றியும் மக்கள் அறிந்து வைத்து இருக்க வேண்டும்.

இரத்தப்பெருக்கு இன்று சர்வசாதாரணமாக இடம்பெறுகின்றது. இதுசம்பந்தமான முதலுதவிச் சிகிச்சையை மக்கள் கட்டாயம் தெரிந்து வைத்து இருக்க வேண்டும்.

பணக்கார இளைஞர்களுக்குத்தான் தனியார் வைத்தியக் கல்லூரி நிறுவப்பட்டது என்ற கருத்துப் பிழையானது. வசதியற்ற மாணவருக்கு உபகாரச் சம்பளம் வழங்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தென் இந்தியாவில் மருத்துவத்துறை கல்வியைப் பெறுவதற்காக எமது மக்கள் இந்திய நாணயத்தில் 3 லட்சம் ரூபாவரை நன்கொடை வழங்க வேண்டியிருக்கிறது.

ஆனால் வட இலங்கை தனியார் மருத்துவக் கல்லூரிக்கு ஒரு லட்சத்து 25 ஆயிரம் ரூபாதான் கட்டணம்.

அப்படியிருந்தும் பெருந்தொகையான மாணவர்கள் இந்தியாவுக்கு மருத்துவக் கல்வியைப் பயில போய்க் கொண்டிருக்கிறார்கள்.

ஆகவே பணக்கார மாணவர்களுக்குத் தான் வட இலங்கை மருத்துவ கல்லூரி போதனை வழங்கும் என்று கூறுவது தவறாகும்.

இப்படி அவர் சொன்னார்.

தனியார் சுகாதார நிலையத் தலைவர் திரு. குமாரசாமி நிகழ்ச்சிக்குத் தலைமை வகித்தார்.

### யாழ். வந்த லொறி கடத்தல்

யாழ்ப்பாணம், பெப். 5

கொழும்பு – யாழ் சேவையில் ஈடுபட்டிருந்த லொறி ஒன்று லட்சக் கணக்கானரூபாபெறுமதியான பொருள்களுடன் கடத்தப்பட்டது.

இயக்கச்சியில் வைத்து திங்களன்று காலை பத்து மணியளவில் இனந்தெரியாத கோஷ்டிஒன்றினால் அந்த லொறி கடத்தப்பட்டதாம். பிரஸ்தாப லொறி சலாம்ஸ் நிறுவனத்தினருக்குச் சொந்தமானது என அறியப்படுகிறது.

வர்த்தக ஸ்தாபனங்களுக்குச் சொந்தமான உணவு மற்றும் பாவனைப் பொருள்கள், கைத்தொழில் நிலையங்கள் சிலவற்றிற்குரிய மூலப் பொருள்கள் என்பன அந்த லொறியில் இருந்ததாகக் கூறப்படுகிறது.

## ஈச்சமோட்டையில் ரூ. ஒன்றரை லட்சம் நகை, பணம், பொருள் கொள்ளை

யாழ்ப்பாணம் பெப். 5,

ஈச்சமோட்டைப் பகுதியில் உள்ள வீடு ஒன்றில் இனந்தெரியாத நபர்கள் இரவு வேளையில் புகுந்து ஒன்றரை லட்சம் ரூபா பெறுமதியான நகைகள், பொருள்கள், பணம் முதலியவற்றைக் கொள்ளையிட்டுச் சென்றனர் என்று தெரிகிறது.

ஓய்வுபெற்ற அரச ஊழியர் திரு. மீ... இரத்தினசபாபதி என்பவரின் வீட்டில்தான் இக்கொள்ளைச் சம்பவம் இடம்பெற்றது.

ஆயுதம் தாங்கிய 3 பேர் இக்கொள்ளையை நடத்தியதாகக் கூறப்படுகின்றது.

புனித இயக்கங்கள் இது விஷயத்தில் தலையிட்டுத் தமக்கு உதவ வேண்டும் என்று பாதிக்கப்பட்ட ... சபாபதி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## சுருக்கெழுத்துக்கு இலவச பயிற்சி

நாகர்கோயில், பெப். 5

வடமராட்சி சுருக்கெழுத்துக்கழகம் யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள சகல உதவி அரசாங்க அதிபர் பிரிவுகள் தோறும் தலா இரண்டு ஆங்கில சுருக்கெழுத்துப் பயிற்சி நிலையங்களை அமைக்க உத்தேசித்திருக்கிறது.

சுருக்கெழுத்துப் பாடத்தில் தேர்ச்சி பெற்றவர்கள் சமூக சேவையில் நாட்டமுள்ளவர்கள் இக்கழகத்தில் அங்கத்தவர்களாகச் சேர்த்துக் கொள்ளப்படுவர் என்று தெரிவிக்கப்படுகிறது.

தங்காலை பகுதியில் ஆங்கில சுருக்கெழுத்து இலவச பயிற்சி வகுப்புக்களை நடத்த விரும்பும் சமூக சேவை நிறுவனங்கள் திரு. க.வ. சிவச்சந்திரதேவன், வடமராட்சி சுருக்கெழுத்துக் கழகம், புலோலி என்ற முகவரியுடன் இம்மாத முடிவிற்குள் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்படுகிறார்கள்.

### மக்கள் முகம்

### தெல்லிப்பளையில் நலன்புரிச்சங்கம்

காங்கேசன்துறை. பெப். 5

தெல்லிப்பழை நலன் புரிச்சங்கம் திரு. கா. சிவநாதன் தலைமையில் அண்மையில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப் பட்டது.

நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவாகினர்.

போஷகர். திரு. சி. சிவமகாராஜா. தலைவர், திரு. க. கயிலைநாதன். செயலாளர். திரு. நா சிவநாதன், தனதிகாரி. திரு. ந செல்வநாயகம். 6பேர் கொண்ட நிர்வாக சபையும் தெரிவானது.

### நிர்வாகிகள்

யாழ்ப்பாணம், பெப்–5

சண்டிலிப்பாய் மாசியப்பிட்டி கிராம அபிவிருத்திச்சங்கத் தலைவராக டாக்டர் த. கோபாலசிங்கம்ஜேபி தெரிவானார்.

ஏனைய நிருவாகிகள் விவரம் பின்வருமாறு; உபதலைவர்கள்: சி. சிவபாதசுந்தரம் ஆர். பரமானந்தம், செயலாளர்; சு. தர்மசீலன், உபசெயலாளர்: ஜே. அந்தனிப் பிள்ளை, பொருளாளர்: த. காராளசிங்கம், கணக்குப் பரிசோதகர்; நா. அமிர்தராஜா, பாதுகாவலர்கள், நா. செல்வரத்தினம் க. மயில்வாகனம்.

### கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்கள்

யாழ்ப்பாணம், பெப். 5

யாழ்மாவட்டத்தில் கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்களாக நியமனம் பெற்றோர் வருமாறு:–

திருமதி. என். கனகம்மா (கொடிகாமம்) திரு. எஸ். சபாரத்தினம் (கொடிகாமம்) திரு. ஜி. கேதீஸ்வரன் (மானிப்பாய்) திரு. ஏ. நாகேஸ்வரன் (கோண்டாவில்) செல்வி. எம். பி. ஏ. நிக்கலஸ் (அச்சுவேலி) செல்வி. எஸ் இலங்கநாயகி (கோப்பாய்) செல்வி. ரி. யோகேஸ்வரி (வண்ணார்பண்ணை) திரு. பி. மலரகிர்தசர்மா (கோப்பாய்) செல்வி. எம். குமுதினி (யாழ்ப்பாணம்) செல்வி. எம். உமாதேவி (காங்கேசன்துறை) செல்வி. கே. சித்ரா (வட்டுக்கோட்டை) செல்வி. திரு. திரு. கே கமலேஸ்வரன் (துன்னாலை) திரு. வி கைலைநாதன் (அளவெட்டி) திரு எம். எம். யேசுராசா (யாழ்ப்பாணம்)

### புதிய கல்விப்பணிப்பாளர்

மானிப்பாய், பெப். 5

யாழ்ப்பாண மாவட்ட கல்விப் பணிப்பாளராக மார்ச் முதலாம் திகதியிலிருந்து திரு. இ. சுந்தரலிங்கம் நியமிக்கப்பட்டிருக்கிறார்.

யாழ்ப்பாணம் கல்வித் திணைக்களத்திலே நிர்வாகப் பொறுப்பாளராகவும் பிரதம கல்வி அதிபராகவும் கடமையாற்றிய திரு. சுந்தரலிங்கத்திற்கு யாழ்ப்பாண மாவட்ட கல்விப் பணிப்பாளராக பதவி உயர்வு கிடைத்திருக்கிறது.

இணுவிலைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர், கல்வி அமைச்சில் பரீட்சைத் திணைக்களத்தில் உதவி அத்தியட்சகராவும் பின்னர் அதிகாரியாகவும் பல காலம் கடமையாற்றியுள்ளார்.

சென்னைப் பல்கலைக் கழகத்தில் விலங்கியல் துறையிலும் லண்டன் பல்கலைக் கழகத்தில் விஞ்ஞான, கலைத்துறைகளிலும் பட்டதாரியாகவும் சிறப்பு சித்திபெற்ற திரு. இ. சுந்தரலிங்கம் கொழும்பு பல்கலைக்கழக கல்வி டிப்ளோமா பரீட்சையில் அதி விசேடசித்தி பெற்ற ஒரேயொரு தமிழர் என்பது குறிப்பிடத் தக்கது.

முதுமானி எழுத்துப் பரீட்சையில் சித்தியடைந்த பின்னர் தற்சமயம் கல்வி சம்பந்தமான ஆய்வுக்கட்டுரைகளை எழுதுவதில்மூழ்கி வருகிறார்.

இணுவில் சைவப்பிரகாசிக வித்தியாசாலை, சாவகச்சேரி இந்துக் கல்லூரி, சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி ஆகிய கல்லூரிகளில் ஆரம்ப கல்வியை பெற்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உதய சங்கற்பம்**

இருக்கும் வரை தானம் செய்; ஆனால் நிதானத்தைக் கைவிட்டு விடாதே!

--பட்டினத்தார்


# உதயன்

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

இல: 15, 2வது ஒழுங்கை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம், தொலைபேசி: 24805 22073

05-02-86 த. பெ. 23


## இலங்கை இனப்பிரச்சினை : இனி என்ன போக்கு?

இலங்கை இனப்பிரச்சினை விவகாரம் இப்போது முக்கிய கட்டத்துக்கு வந்திருக்கிறது. அது எப்படி?

பேச்சுவார்த்தை மூலம் அரசியல் தீர்வு ஒன்றைக் கண்டு இனப்பிரச்சினையை இல்லாமற் செய்யலாம் என்ற நம்பிக்கை வெகுவாக அருகிவிட்டது.

அரசியல் தீர்வு என்று சொல்லிக் கொண்டே, இராணுவத் தீர்வைக் காணுவது என்ற இலங்கை அரசின் எண்ணம் இப்போது வெளிப்படையாகி வருகிறது.

பேச்சுவார்த்தை மூலம் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணலாம், அதற்கான அறிகுறிகள் இருக்கின்றன என்று கூறி வந்த இந்தியாவே மனம் தளர்ந்துவிட்டது.

இந்திய வெளியுறவு அமைச்சர் திரு. பலிராம் பகத், அந்த நாட்டின் வெளியுறவுச் செயலாளர் திரு. ரொமேஷ் பண்டாரி ஆகியோர் வெளியிட்ட கருத்துக்கள் அதனை நிருபிக்கின்றன.

இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு காணப்படும் என்று இலங்கை அரசாங்கம் திரும்பத் திரும்ப உறுதிபடக் கூறுகிறது. இலங்கையின் இந்தப் போக்கு பெரும் வேதனையைத் தருகிறது. இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணுவதற்கு உகந்த சூழ்நிலை எதுவும் தென்படவில்லை. இவ்வாறு தெரிவித்தவர் திரு. பகத்.

இலங்கை இனப்பிரச்சினைக்கு அரசியல் உடன்பாடு காணப்படுவதையே இந்தியா வலியுறுத்துகிறது. இராணுவத் தீர்வு காண்பதற்கு இநதியா உடன்படாது. ஆனல் பேச்சுவார்த்தைக்கு ஏற்ற சாதகமான சூழ்நிலை இப்போது இல்லை. இவ்வாறு சொன்னவர் திரு. ரொமேஷ் பண்டாரி.

இலங்கையின்போக்கை இந்தியா அறிந்து விட்டது. அதனை வெளிபபடுத்தியும் விட்டது. இந்த நிலையில் இந்தியா தனது பங்கை எப்படி வகிக்கப் போகிறது? இந்தக் கேள்வியே இப்போது இலங்கைத் தமிழ் மக்களில் பெரும்பாலானவர்கள் மனதில் எழும் கேள்வி.

பேச்சுவார்த்தை மூலம் பிரச்சினையைத் தீர்க்க இலங்கை விரும்பவில்லை. இராணுவத் தீர்வு காண்பதை இந்தியா விரும்பவில்லை. அவ்வாறயின் இந்தியாவின் நோக்கம் என்ன?

இதனையே இனப்பிரச்சினை சம்பந்தமான முக்கிய கட்டம் என்று நாம் கருதுகிறோம்.

இலங்கை விடயத்தில் இந்தியாவுக்கு ஏன் அக்கறை? அது ஏன் இதில் சம்பந்தப்பட வேண்டும்? என்று தென்னிலங்கைத் தீவிரவாதிகள் கேட்கக் கூடும்.

ஆனல் அவர்கள் அவ்வாறு கேட்கமுடியாது. கேட்கவும் கூடாது. ஏனெனில் அவர்களின் அரசாங்கம் இந்தியாவின் மத்தியஸ்தத்தையும் உதவியையும் பெற விரும்பியது. அதற்கு உத்தியோக பூர்வமாக இணக்கமும் தெரிவித்தது. அதன் பிற்பாடு தான் திரு. பார்த்தசாரதி சிறப்புத் தூதுவராக, இற்றைக்கு முப்பது மாதங்களுக்கு முன்னர் இலங்கைக்கு வந்தார்.

அதன் பிறகு எத்தனையோ மந்திரிப் பிரதானிகள், அதிகாரிகள் ஆகியோர் இங்கிருந்து அங்கும், அங்கிருந்து இங்குமாக வந்து போய் விட்டார்கள். எத்தனையோ தடவைகள், சுற்றுக்கள் பேச்சுக்கள், குசுகுசு சந்திப்புகள் நடந்துவிட்டன. அவற்றின் பிறகும் இராணுவத் தீர்வுக்குத்தான் இலங்கை குறி வைக்கிறது. இது இந்தியாவுக்கும் புரிந்துவிட்டது. திரு. பண்டாரியின் இலங்கை விஜயம், இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தியின் நேரடி உத்தரவின்பேரில் தான் ரத்துச்செய்யப்பட்டது.

அவ்வாறயின் இந்தியாவின் நோக்கும் போக்கும் என்ன என்பது கேட்கத் தானே தோன்றும்?

ஆனல் இந்தியா தான் தங்கள் பிரச்சினையைத் தீர்க்கவேண்டும் என்று தமிழர்கள் காத்துக்கொண்டிருக்கக் கூடாது. இராணுவத்தீர்வு என்று அரசாங்கம் கூறுவதை அகில உலகுக்கும் எடுத்துச் சொல்லி அவர்கள் ஆதரவை எமக்குத் திரட்ட வேண்டும். ஓர் இனத்தை அழிப்பதை நிறுத்துமாறு இலங்கை அரசை நிர்ப்பந்திக்குமாறு கோர வேண்டும்.

இராணுவத் தீர்வுக்கு எதிராகவும், இன அழிப்புக்கு எதிராகவும் உலக அபிப்பிராயத்தைத் திரட்ட வேண்டும். அதற்கான ஒவ்வொரு சந்தர்ப்பத்தையும் ஒவ்வொரு தமிழனும் தவறாது பயன்படுத்த வேண்டும். குறிப்பாக வெளிநாடுகளில் உள்ள தமிழர்களும் தமிழ் இயக்கங்களும் இதில் அக்கறை காட்டுவது அவசியம்.

★ வெள்ளம் காரணமாக

# புலோலி மேற்கில் வெங்காயச் செய்கை பாதிப்பு

## ரூபா 50 லட்சம் நட்டம் ஏற்படும் ஆபத்து

நாகர்கோயில், டெப் 5

" கடந்த மாதம் தொடர்ச்சியாகப்பெய்த மழை, பெருவெள்ளம் ஆகியவற்றினல் புலோலி மேற்குப் பகுதியில் 100 ஏக்கர் பகுதியில் சுமார் 50 லட்சம்ரூபா பெறுமதி வாய்ந்த வெங்காயச் செய்கை பாதிக்கப்பட்டுள்ளது "

புலோலி மேற்கு விவசாயிகள் சங்க அங்குரார்ப்பணக் கூட்டம் நாவலர் சனசமூக நிலைய மண்டபத்தில் திரு. கு. வேலாயுதம் தலைமையில் நடைபெற்றபோது செயலாளர் திரு. க தங்கராசா இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

அங்குஅவர்தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

வருடாவருடம் ஏற்படும் வெள்ள அழிவினல் இப்பகுதி விவசாயிகள் பெரிதும் கஷ்டமடைகிருர்கள். 1983-ஆம் ஆண்டு வெள்ளத்தினல் ஏற்பட்ட பாதிப்புக்கு முக்கிய காரணம் வெளிவெள்ளமே. வெள்ளம் வடிகால் வசதியில்லாததால் தோட்ட நிலங்களுக்குள் உள்ளிட்டது.

இந்நிலைமை எதிர்காலத்திலும் ஏற்படாதவாறு விவசாயிகளைப் பாதுகாப்பதற்குத் தேவையான வடிகால் அமைப்புக்கள் செய்து வெளிவெள்ளத்தினைக்கடலுக்குள் பாய்ச்ச நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

மேலும் புலோலி மேற்குப்பகுதியில் அமைக்கப்படவிருக்கும் 20 தொன் உரக் களஞ்சியத்தை புலோலி மேற்கு மாயக்கைப்பகுதியிலுள்ள அரச காணியில் நிர்மாணிப்பதனல் இப்பகுதியைச் சுற்றியுள்ள கிராம விவசாயிகள் பெரும் பயன் அடைவார்கள். ஆகையினல் இவ்விரு விஷயங்களையும் யாழ். அரசாங்க அதிபருக்கு தீர்மானமாக நிறைவேற்றி அனுப்பி வைக்க வேண்டும்— என்ருர்.

கூட்டத்தின்போது இவ்விரு தீர்மானங்களும் சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன.

## அடக்கப்படும் மக்களுக்கு எதிராக மொஸாட் தந்திரம்

### இஸ்லாமிய இளைஞர் அமைப்பு கூறுகிறது

யாழ்ப்பாணம், பெப். 5

ஜெருஸலம் அல்-அக்ஸா பள்ளிவாசலில் இஸ்ரவேல் அண்மையில் நடத்திய காட்டுமிராண்டித்தனமான நடவடிக்கையைக் கண்டித்து யாழ்ப்பாணம் இஸ்லாமிய இளைஞர் அமைப்பு அறிக்கை ஒன்றை விடுத்துள்ளது.

அறிக்கை வருமாறு;

அமெரிக்கா ஏகாதிபத்தியத்தின் துணைகொண்டு இஸ்ரவேல் பலஸ்தீனியர்களுக்கு எதிராகச் செயல்படுகின்றது. அல்-அக்ஸா பள்ளிவாசலில் அநாகரிகமான செயலில் இஸ்ரவேல் ஈடுபட்டுள்ளார்கள். இஸ்ரவேல் கூலிப்படையான மொஸாட் இதில் ஈடுபடுகிருர்கள்.

இஸ்ரவேல் உளவுப் படை மொஸாட் அடக்கி ஒடுக்கப்படுகின்ற மக்களுக்கு எதிராகச் செயல்படுகிறது.

நம்மத்தியில் கூட மொஸாட் தனது தந்திரங்களைப் பயன்படுத்துகின்றது.

அரபு உலகில் ஆதிக்கம் செலுத்தி வரும சில அரபு நாடுகளின் தலைவர்கள் வர்க்க அடிப்படையில் இஸ்ரவேலை கூட்டுச் சேர்க்கிருர்கள்.

புனித இஸ்லாத்தையும் இஸ்லாமிய மக்களின் நாடுகளையும் பாதுகாக்க மேலும் உயிர்த்தியாகங்கள் செய்யப்படுகின்றன.

புனித அல்-அக்ஸா பள்ளிவாசல், சொந்த நாடு ஆகியவற்றை மீட்பதற்கு போராட்டமே சிறந்தது.

இப்படி அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

## ஆசிரியர் போதனைக்கு மாணவர் ஒத்துழைப்பு அவசியம்

### பிரிவுபசார விழாவில் உரை

மானிப்பாய், பெப். 5

தன்னிடம் கல்வி கற்கும் எல்லா மாணவர்களினதும் நல்லெண்ணத்தையும் ஒத்துழைப்பையும் பெற்றுக் கொள்வதன் மூலம்தான் போதனசிரியர்கள் தமது சேவையை திறம்படச் செய்ய முடியும் மாணவர்களின் உள்ளங்களைப் புரிந்துகொண்டு அவர்களுடன் இணைந்து செயற்படும் ஆசிரியரால்தான் இலகுவில் பாடங்களை போதனை செய்ய முடியும்.

யாழ்ப்பாணம் கொக்குவில் தொழில் நுட்ப கல்லூரியின் உப அதிபராக கடமையாற்றி, சம்மாந்துறை தொழில்நுட்பக் கல்லூரிக்கு அதிபராகப் பதவியுயர்வு பெற்றுச் செல்லும் திருவாளர் வி. பாக்கியநாதன் அவர்களின் சேவையைப் பாராட்டிப் பேசிய கொக்குவில் தொழில் நுட்பக் கல்லூரி அதிபர் திரு. எஸ். இராஜேந்திரா மேற்கண்டவாறு கூறினுர்.

தொழில்நுட்பக் கல்லூரி மாணவர் நலன் புரிச் சங்கத்தினரின் ஆதரவில் திரு. வி. பாக்கியநாதன் அவர்களுக்கு பிரிவுபசாரமும் பாராட்டு விழாவும் நடைபெற்றது.

மேற்படி கல்லூரி நலன் புரிச் சங்கத்தின் தலைவர் திரு. க. சூரியமூர்த்தி இவ்விழாவுக்கு தலைமை வகித்தார்.

தமக்கு அளிக்கப்பட்ட பாராட்டுதல்களுக்கும் பிரிவுபசாரத்திற்கும் தமக்கு இதுவரை காலமும் வழங்கிய ஒத்துழைப்புக்கும் திரு. வி. பாக்கியநாதன் நன்றி தெரிவித்தார்.

மாணவர்களின் சார்பில் உயர்நிலை மாணவர் ஒன்றியத்தின் தலைவர் திரு. எஸ். எட்வேட் தொழில்நுட்பக் கல்லூரி வணிகத்துறைத் தலைவர் திரு. அ இரத்தினம், ஜனப். மவ்றூப் ஆகியோரும் பாராட்டுரைகள் வழங்கினர்.

## விவசாயிகளுக்கு உர விநியோகம்

யாழ்ப்பாணம், பெப். 5

யாழ். மாவட்ட விவசாயிகளுக்குக் கமநல சேவை நிலையங்கள் ஊடாக மூன்று வகை உரங்கள் வழங்கப்பட உள்ளன.

யூரியா, டி. டி. எம்., வி. மிக்சர் ஆகிய மூன்று பசளைகளேவழங்கப்பட உள்ளன.

639 மெற்றிக் தொன் யூரியா, 375 மெற்றிக் தொன்டி. டி எம். 620மெற்றிக் தொன் வி மிக்சர் ஆகியவையாழ். மாவட்ட விவசாயிகளுக்கு வழங்கப்பட உள்ளன. என்று கமநல சேவை ஆணையாளர் திரு. க. பரமலிங்கம் உதயனுக்குத் தெரிவித்தார்.

## முதியோர் கல்வி வகுப்பு

வட்டுக்கோட்டை, பெப். 5

சுழிபுரம் காட்டுப்புலம் கிராமத்தில் முதியோருக்கு கல்வி வகுப்புகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இக்கிராமத்தில் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையின அதிபர் திரு. அ சுப்பிரமணியம் அவர்கள் இக்கிராம மக்களின் நன்மை கருதி வளர்ந்தோர் கல்வியை ஆரம்பித்துள்ளார்.

முதியோர் கல்விக்கான வகுப்புகள் கடந்த வாரம் முதல் மாலை நேரத்தில் நடத்தப் பட்டு வருகின்றன.

பாடசாலைக் கல்வி பயிலாதவர்கள் இவ் வகுப்புகளில் சேர்ந்து படித்து வருகின்றனர். இக்கல்வியை ஆரம்பித்து நடத்திவரும் திரு. அ. சுப்பிரமணியம் அதிபரை பொதுமக்கள் பாராட்டி வருகின்றனர்.

# முல்லைத்தீவில் உணவுத் தட்டுப்பாடு

## சிகிச்சை பெறுவதில் சிக்கல்

யாழ்ப்பாணம், பெப். 5

தொடர்ந்து நடைபெறும் அசம்பாவிதங்களினல் முல்லைத்தீவுப் பட்டினத்தில் மயான அமைதி நிலவுகின்றது.

கடைகள் எல்லாம் பூட்டப்பட்டுள்ளதால் உணவுப்பொருள் தட்டுப்பாடு ஏற்பட்டு உள்ளது.

மக்கள் அளம்பில், புதுக்குடியிருப்பு, குமுளமுனை, தண்ணீரூற்று, முள்ளியவளை ஆகிய கிராமங்களில் தஞ்சம் அடைந்துள்ளனர்.

முல்லைத்தீவு வைத்தியசாலையின் முன்பக்கச் சுவர்கள் பீரங்கி வேட்டுக்களால் சேதமடைந்துள்ளன.

அசம்பாவிதங்களில் காயம் அடைந்தவர்களுக்கு உடன் சிகிச்சை அளிக்கமுடியாத நிலைமை ஏற்பட்டு உள்ளது. போக்குவரத்துத் துண்டிக்கப்பட்டுள்ளதே இதற்குக் காரணம்.

பல தினங்கள் உயிருடன் போராடிய நிலையில் கிளிநொச்சி, யாழ் ஆஸ்பத்திரிகளுக்கு அவர்கள் அனுப்பி வைக்கப்படுகிருர்கள்.

முல்லைத்தீவு முகாமின் சுற்றுடலில் உள்ள வீடுகள் எல்லாம் பீரங்கி, விமானத் தாக்குதல்களினல் சேதமாக்கப்பட்டுள்ளன.

## பேச்சுப்போட்டி

யாழ்ப்பாணம், பெப். 5

ஸ்ரீ ராமகிருஷ்ண ஜெயந்தியை ஒட்டி மாணவர் மத்தியில் பேச்சுப் போட்டி ஒன்றை நடத்த திருநெல்வேலி ஆடியபாதம் வீதியில் உள்ள ராமகிருஷ்ணலயம் ஏற்பாடு செய்துள்ளது.

திருநெல்வேலியில் வசிக்கும் மாணவர் இப்போட்டியில் கலந்து கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

பேச்சுப் போட்டிகள் மார்ச் 1 ஆம் திகதி நடைபெறும். பரிசளிப்பு விழா மார்ச் 8 ஆம் (சிவராத்திரி தினம்) திகதி நிகழும்.

பருத்தித்துறை ஸ்ரீ ராமகிருஷ்ண - சாரதா சேவாச்சிரமத் தலைவர் ஸ்ரீ மத் சுவாமிகள் சித்ரூபானந்தா பரிசுகளை வழங்குவார்.



**பொய்யாமொழி**

குறள்:

தம்மின்தம் மக்கள் அறிவுடைமை மாநிலத்து
மன்னுயிர்க் கெல்லாம் இனிது.

பொருள்:

தம்மக்களின் அறிவுடைமை, தமக்கு இன்பம் பயப்பதை விட உலகத்து உயிர்களுக்கு எல்லாம் மிகுந்த இன்பம் பயப்பதாகும்.

படையினர் சூட்டுக்குப் பலியானோர் நினைவாக

# உருத்திரபுரத்தில் கலைக்கூடம் ஒரு லட்சம் ரூபா செலவில்

## அடிக்கல் நட்டார் நல்லை குருமகா சந்நிதானம்

உருத்திரபுரம், பெப். 5

உருத்திரபுரம் காந்தி சேவா சங்கக் காணியில் சுமார் ஒரு லட்சம் ரூபா செலவில் புதிய கலைக்கூடம் ஒன்று அமைக்கப் படவுள்ளது.

இதற்கான அத்திவாரக் கல்லை நல்லைக் குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரதேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் சுபவேளையில் நட்டு வைத்தார்.

அகில இலங்கை காந்தி சேவா சங்கத் தலைவர் திரு. கே. வேலாயுதபிள்ளை தலைமையில் சைவசமய முறைப்படி இக் கலைக் கூடத்திற்கான அடிக்கல் நடும் வைபவம் நடைபெற்றது.

சிவன் ஆலயத்துடன் சேர்த்து அமைக்கப்பட இருக்கும் இக் கலைக்கூடத்[illegible] ப[illegible]தேச சர்வோதய [illegible] திரு. கே. கதிரமலை பொறுப்பேற்றுள்ளார்.

வவுனியா லிங்கம் தோட்டத்தில் நடைபெற்ற படையினரின் துப்பாக்கிச் சூட்டில் பலியான தமது மனைவி மாமன், மாமி ஆகியோரின் ஞாபகச் சின்னமாக அவர் இக்கலைக்கூடத்தை அமைக்கிருர்.

சங்கீதம், நடனம் ஆகிய கலைகளில் ஆர்வமுள்ள மாணவர்களுக்கு இக் கலைக்கூடத்தில் இலவச போதனை வழங்கப்படும்.

## பழைய மாணவர் பொதுக்கூட்டம்

சுண்டுக்குளி, பெப். 5

யாழ்ப்பாணம் திருநெல்வேலிசெங்குந்தா இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் பொதுக் கூட்டம் எதிர்வரும் (9-2-86) ஞாயிற்றுக்கிழமை நடைபெற இருக்கறது.

கல்லூரி மண்டபத்தில் பிற்பகல் 4-00 மணிக்கு கூட்டம் ஆரம்பமாகும்.

## அணுகுண்டுக்கு இலக்கானவர் மரணம்

ஹிரோஷிமா, பெப். 4

40 ஆண்டுகளுக்கு முன்னர் ஹிரோஷிமாவில் வெடித்த அணுகுண்டினல் பாதிக்கப்பட்டவர்களில் 1ஆம் நம்பராகக் கணிக்கப்பட்டு வந்தவர் ஜனவரி 25இல் மரணமானர்.

அவரது உடம்பில் அணுகுண்டு வெடித்ததினல் ஏற்பட்ட தழும்புகள் நிறைய இருந்தன.

திரு. இயோஷி கிச்கோ[illegible] மாரடைப்பினல் ஹிரோஷிமா ஆஸ்பத்திரியில் மரணமானர்.

## தேசிய சேமிப்பு வங்கி புதிய வட்டி வீதம்

கொழும்பு, பெப். 5

தேசிய சேமிப்பு வங்கி புதிய வட்டி வீதங்களை அறிவித்து உள்ளது.

பெப்ரவரி நான்காம் திகதி வட்டி வீதம் நடைமுறைக்கு வந்துள்ளது.

ஒரு ஆண்டுக்கான வைப்புப் பணத்துக்கு, கால முதிர்வில் 13 சத வீத வட்டி வழங்கப் படும்.

மாதம் தோறும் வட்டி வழங்கும் ஒரு வருட கால வைப்புப் பணத்திற்கு, வருடாந்த வட்டி வீதம் 12 ஆக இருக்கும்.

மாத கால வைப்புப் பணத்துக்கு கால முதிர்வில் 12 சதவீத வட்டி இடைக்கும்.

## விித்தாரம்

வாரும் மிஸ்டர் முரளியாரே! சுகந்தானே.

அது இருந்தாப் போதும். நோயற்ற வாழ்வுதான் குறைவற்ற செல்வமப்பா. பணம் இருந்தால் சுகம் எண்டு சிலபேர் நினைக்கினம். அதுதப்பு, சுகம் இருந்தால்தான் பணத்தையும் தேடலாம். உந்தச் சித்தாந்தம் எல்லாம் ஏன் எனக்கு?

நேற்றைக்கு உதயன் பாத்தனியோ? நீ விடிஞ்ச உடனை பல்லு விளக்குறதுக்கு முன்னுக்குச் செய்யிறவேலை அது தானே. உன்னைப்போய்க் கேக்கிறேனே நான்!

இத்தனை நாளாய் வடக்கு கிழக்கிலை இந்தநாட்டுச் சனங்களுக்குத்தான் மின்கம்பத் தண்டனை கிடைச்சு வந்திது.

இலங்கையின்ரை சுதந்திரதினத்தையொட்டியோ என்னவோ தெரியாது, யாழ்ப்பாணம் பஸ் ஸ்ரான்டிலை வெளிநாட்டுத் தலைவர் ஒருவருக்கும் மின்கம்பத் தண்டனை கிடைச்சிது.

அதுதான் உனக்குத் தெரியுமே, இஸ்ரவேல் என்ற அரக்கர் நாட்டின் பிரதம மந்திரிக்கு மின்கம்பத் தண்டனைகொடுத்திருந்தாங்கள்.

சிமோன் பெரஸ் என்ற அந்த அரக்கர் தலைவனின் கொடும்பாவிக்கு மின்கம்பத் தண்டனை வழங்கி இருந்தார்கள் இளைஞர்கள்.

கொடும்பாவிக்குக் கிழே நல்ல பொருத்தமான கவர்ச்சி வாசகமும் எல்லே எழுதியிருந்திது. ''உலக மக்களின் உயிர்களைப் பலி எடுக்கும் பிணம் தின்னி இஸ்ரவேல் பிரதமரைப் பாரீர்'' எண்டு அதில் இருந்திது.

நல்ல காலம். தன்ரை மொசாட் படையளை மட்டும் அனுப்பிப்போட்டுத் தான் இங்கை வராமல் பெரஸ் தப்பிவிட்டார். அவர் வந்திருந்தால் எங்கடை பெடியள் உயிரோடை பிடிச்சே மின்கம்பத் தண்டனை குடுத்தாலும் குடுத்திருப்பாங்கள்!. அது போகட்டும்.

நேற்றைக்கு இலங்கையின்ரை 38 ஆவது சுதந்திரதினம்! எண்டு சொல்லுகினம் எல்லே.

ஆனல் தமிழராகிய எங்களுக்கு இன்னும் சுதந்திரம் கிடைக்கவில்லையே. வீட்டிலை இருந்து அரை மைல் தூரத்திலை இருக்கிற வயலுக்குப் போக வெளிக்கடையிக்கையே என்ன நடக்கும் எண்ட பயத்தோடை மனச்சுதந்திரம் இல்லாமல் போக வேண்டி இருக்கு. பிறகு எங்கேயப்பா அரசியல் சுதந்திரம் எங்களுக்கு?

அதை நல்ல விதமாய் எங்கடை சனம் நேற்றைக்கு எடுத்துக் காட்டி விட்டுதுகள். சுதந்திர தின வாடையே யாழ்ப்பாணத்தில வீசயில்லை. சனம் தங்கடை தங்கடை வேலையளை வழமையான ஒரு நாளாப் பாவிச்சுச் செய்திதுகள்.

இஞ்சினை சுதந்திரதினம் கொண்டாடிச்சினமோ, கொடி கட்டிச்சினமோ எண்டு பாக்கிறதுக்காக வாக்கும் பின்னேரம் அஞ்சு மணிக்கு ஒரு பிளேன் மேலாலை பறந்திச்சுது.

நேற்றைக்கு நகரிலை பல இடங்களிலும் நல்ல சுவையான நோட்டீஸ் ஒண்டு ஒட்டி இருந்திது: அது வருமாறு:-

* * *

காணவில்லை
பெயர்: சுதந்திரம்
வயது: 38
பெப்-04-1986
சிறீ

* * *

எங்கடை பெடியள் வெளிச்சமா நோட்டீஸ் ஒட்டியிருந்தாங்கள்.

ஆனல் உந்த யு.என். பிக்காரர், ஸ்ரீலங்கா அரசாங்கக்காலத்திலை " O Democracy" எண்ட ஒரு விளம்பரத்தை ஒளிச்சு விளையாடியெல்லே பேப்பரிலை போட்டவை. அப்ப அவைக்கு நோட்டீஸ் ஒட்டக்கூட நெஞ்சுத் துணிவு இருக்கயில்லை இப்ப எங்களிலை குதிரை விடப் பாக்கினம்!

கொண்டோடி

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

88 Aug. A/L
கலை, வர்த்தகம்
ஆரம்பம்:
05 - 02 - 1986 (புதன்-4.00)
NIRU Tuition Centre
Station Road, KONDAVIL.
Branch: KOKUVIL.

# உதயன்

05. 02. 1986

88 Aug. A/L வகுப்புக்கள்
Maths - A. பத்மநாதன்
Physics - சொர்ந்தி
Chemistry - செல்வா
Zoology - ஞானேந்திரன்
Botany - பாலா
ஆரம்பம்- 05 - 02 - 1986 (புதன்-4.00)
NIRU Tuition Centre
Station Road, KONDAVIL.

சுதந்திரதின வைபவம்:

# மதகுருமார் பகிஷ்கரிப்பு

## மட்டக்களப்பில் நடந்தது

மட்டக்களப்பு, பெப். 5
மட்டக்களப்பில்நேற்று நடைபெற்ற சுதந்திர தின தேசியக் கொடியேற்றும் நிகழ்ச்சியை, இந்து கிறிஸ்தவ மத குருமார்கள் பகிஷ்கரித்தனர்.

குருமார்கள், வழிபாட்டுத் தலங்களுக்குச் செய்யப்படும் அவமரியாதைகளுக்கு ஆட்சேபம் தெரிவிக்கும் வகையில், இப்பகிஷ்கரிப்பு இடம்பெற்றது.

மட்டக்களப்பில் வெபர் விளையாட்டுஅரங்கில் நேற்றுக்காலை அரசாங்க அதிபர் திரு. எம். அந்தோனிமுத்து தேசியக்கொடியைஏற்றிவைத்தார்.

பொலிஸ் அதிகாரிகள், அரச உயர்அதிகாரிகள் மட்டுமே நிகழ்ச்சியில் கலந்துகொண்டனர்.

பொதுமக்கள் எவரும் கலந்துகொள்ளவில்லை.

கலந்துகொள்வதாக இருந்த மட்டக்களப்பு மாவட்ட அமைச்சர் திருமதி ரங்கநாயகி பத்மநாதன் இறுதி நேரத்தில் கலந்துகொள்ளவில்லை.

அழைக்கப்பட்டு இருந்த மதகுருமார்களும் வைபவத்திற்கு வரவில்லை.

மதகுருமார்கள், மத வழிபாட்டுத் தலங்கள் ஆகியவற்றை அவமரியாதை செய்யும் நடவடிக்கைகளை ஆட்சேபித்தே, மதகுருமார்கள் சுதந்திரதின நிகழ்ச்சியைப் பகிஷ்கரித்தனர் எனத் தெரிகின்றது.

இதுசம்பந்தமாக மகஜர் ஒன்றைஜனாதிபதிக்கு அனுப்பவும் மதகுருமார்கள் முயற்சி எடுத்து வருகின்றனர்.

## ஆசிரியர் நியமனக் கடிதம்

கிளிநொச்சி, பெப். 5
கிளிநொச்சி முல்லைத்தீவுப் பகுதிகளில் புதிதாக நியமிக்கப்பட்டிருக்கும் ஆசிரியர்களுக்கான நியமனக் கடிதங்கள் இன்று புதன்கிழமையும், வியாழன், வெள்ளிக்கிழமைகளிலும் கிளிநொச்சி கல்விப் பணிமனையில் வைத்து வழங்கப்படும்.

கிளிநொச்சி, முல்லைத்தீவுப்பகுதிக்குப் பொறுப்பான கல்விப் பணிப்பாளர் ஜனாப். எம். எம். மன்சூர் இதனைத் தெரிவித்தார்.

மலையக வன்செயல் —

# தாக்குதல் தொடர்கிறது

## தொழிலாளர் வேலைக்கு வரவில்லை

கொழும்பு, பெப். 5
மலையகத்தில் வன்செயல்களினால் பாதிக்கப்பட்ட தோட்டங்களில் வாழும் தொழிலாளர்கள் பெரும்பாலோர் இன்னும் வேலைக்குத் திரும்பவில்லை.

அமைச்சர் திரு தொண்டமான் வேண்டுகோள் விடுத்த பின்னரும், வேலைக்குத் திரும்புவதில் தோட்டத் தொழிலாளர்கள் தயக்கம் காட்டுகின்றனர் என்று தெரியவருகிறது.

நேற்றும் ஹட்டன் நகரில் சில தமிழ்க் கடைகள் தாக்கப்பட்டன. நேற்று முன்தினம் ஹட்டன் பகுதியில் உள்ள சிங்களக் குடியேற்றத் திட்டம் ஒன்று தாக்கப்பட்டது, ஆயுதப் படையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் 4 பேருக்குக் காயம் ஏற்பட்டது.

லிண்டுல நகரிலும் நேற்று பகல் பதற்றம் ஏற்பட்டது.

இதனிடையில் பொது இடங்களில் தங்கி உள்ள சிங்கள அகதிகளை, அரச அதிகாரிகள் வேறு இடங்களுக்கு அழைத்துச் செல்கின்றனர் என்று தெரிகிறது.

நேற்று அமைச்சர் தொண்டமான், இ. தொ. கா. பொதுச்செயலாளர் திரு எம். எஸ். செல்லச்சாமி, திரு ஜெயா பெரி சுந்தரம் ஆகியோர் ஹட்டன், நோர்வூட், தலவாக்கலைப் பகுதிகளுக்கு விஜயம் செய்தனர்

ஹட்டன் இந்து மகா சபை மண்டபத்தில் இ. தொ. கா. மாவட்ட அதிகாரிகளை அவர்கள் சந்தித்தனர்.

நடந்தவற்றை எண்ணிக் கோபப்பட வேண்டாமென்றும் வேலைக்குத் திரும்பும்படியும் அமைச்சர் தொண்டமான் தோட்டத்தொழிலாளர்களைக் கேட்டுக் கொண்டார்.

அமைச்சர் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆறுதலும் கூறினார்.

நேற்று மாலை அமைச்சர் தொண்டமான் குழு கொழும்பு திரும்ப இருந்தது.

## கடத்தப்பட்டவர் மின்கம்பத்தில்

கொழும்பு, பெப். 5
மன்னாரில் கடத்தப்பட்ட இ. போ. ச. சாரதிக்கு மின்கம்ப மரணதண்டனை விதிக்கப்பட்டது.

நேற்று இவரின் சடலம் நகரில் மின்கம்பத்துடன் கட்டப்பட்டிருக்கக் கண்டுபிடிக்கப்பட்டது,

இறந்தவரின் பெயர் எட்விட் குறூஸ் போக்குவரத்துச் சபை ஊழிய ரான இவர் பாதுகாப்புப் படையினர் பாவிக்கும் பஸ்ஸின் சாரதியாகவே பணியாற்றி வந்தார்.

சம்பளம் பெறுவதற்காக டிப்போவிற்கு வந்த சமயத்திலேயே இவர் திங்கட்கிழமை கடத்தப்பட்டார்.

# முஸ்லிம்களின் மனஉணர்வை இஸ்ரவேலுக்கு கூறுங்கள்!

## அரசுக்கு யாழ் முஸ்லிம்கள் வற்புறுத்து

யாழ்ப்பாணம்,பெப். 5
இலங்கை அரசு இங்கு உள்ள முஸ்லிம்களின்மன உணர்வைஇஸ்ரவேலிடம் தெளிவுபடுத்தவேண்டும்.

யாழ்ப்பாணத்தில் நேற்று முன்தினம் கூடிய முஸ்லிம்கள் இப்படித்தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியிருக்கிறார்கள்.

இஸ்ரவேலின் அட்டூழியங்களைக் கண்டிக்கும் தீர்மானங்கள் பல இக்கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன.

கூட்டத்துக்கு மொகிதீன் ஜும்மாபள்ளிவாசல் கதீப் மௌலவி சதக்கத்துல்லாஹ் தலைமை வகித்தார்.

முஸ்லிம்களின் கலை, கலாசார,மத நிலையங்களாக பள்ளி வாசல்கள் திகழுகின்றன. பள்ளிவாசல்களின் தொடர்பு இன்றி எந்த ஒரு முஸ்லிமும் இருக்கமுடியாது — இப்படிகூட்டத்தில்பேசிய முஸ்லிம் பிரமுகர்கள் கூறினர்.

கீழ்வரும் தீர்மானங்கள் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டன.

அல் - அக்ஸா பள்ளிவாசலில் தனது அட்டூழியங்களை இஸ்ரவேல் நிறுத்த வேண்டும் அல்-அக்ஸா பள்ளிவாசலை உடைத்து அந்தஇடத்தில் 'சொலமன் தேவாலயத்தை' நிறுவும் திட்டத்தை இஸ்ரவேல் கைவிட வேண்டும்.

பலஸ்தீன மக்களின் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும். இஸ்ரவேலுடனான சகல தொடர்புகளையும் முஸ்லிம்நாடுகள் துண்டித்துக் கொள்ள வேண்டும்.

ஐ நா.பாதுகாப்புசபையில் இஸ்ரவேலின் அட்டூழியங்கள் விவாதிக்கப்படும் போது, அமெரிக்கா 'வீட்டோ' அதிகாரத்தை பாவிக்காமல் இருக்க வேண்டும்.

### மட்டுநகரில்....

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

வில்லை. ஒன்று, இரண்டு இ. போ. ச. பஸ்கள் சேவையில் ஈடுபட்டன.

பயணிகள் இல்லாத காரணத்தினால் வெறும் பஸ்களே சேவையில் ஈடுபட்டன.

இடை வழியில் சாரதிகள் மிரட்டப்பட்டதைத் தொடர்ந்து காலை 10 மணியுடன் பஸ் சேவை ஸ்தம்பிதம் அடைந்தது.

மட்டக்களப்பில் இருந்து வெளியூர்களுக்குப் புறப்பட்ட இ. போ. ச. பஸ்கள் மட்டக்களப்பு - வாழைச்சேனை வீதியில் ஆறுமுகத்தான் குடியிருப்பு என்ற இடத்தில் வைத்து வழி மறிக்கப்பட்டன. பயணத்தைத் தொடராமல் சகல பஸ்களும் மட்டக்களப்புக்கே திருப்பி அனுப்பி வைக்கப்பட்டன.

மட்டக்களப்பு-கல்முனை வீதியிலும் கிரான் குளம் என்னும் இடத்தில் வைத்து சகல பஸ்களும் வழிமறிக்கப்பட்டு திருப்பி அனுப்பி வைக்கப்பட்டன.

ஏறாவூர் ரயில் நிலையத்தில் பறந்த தேசியக் கொடி, கொடிக் கம்பத்துடன் மாயமாய் மறைந்தது.

இறைவரித் திணைக்கள அலுவலகத்தில் பறந்த கொடியும் இனந்தெரியாதவர்களினால் அகற்றப்பட்டது.

#### கொடிகளுக்கு காவல்

சில அரசு அலுவலகங்களில் தேசியக் கொடி பறந்தது. அந்த அலுவலகங்களுக்கு காலை முதல் மாலை வரை ஆயுதப் படையினர் பாதுகாப்பு வழங்கினர்.

# விளையாட்டரங்கு

## சென்ஜோன்ஸ் கல்லூரி வெற்றியீட்டியது

யாழ்ப்பாணம், பெப். 5
இந்த வருடத்திற்குரிய கிரிக்கெட் சீசனின் முதல் ஆட்டத்தில் யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரி, யாழ்ப்பாணம் சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழகத்தை தோற்கடித்தது.

மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்கள் அடிப்படையில் ஆட்டம் நடத்தப்பட்டது.

கடந்த சனிக்கிழமை யாழ் சென் ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இந்த ஆட்டத்தில் சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழகம் முதலில் துடுப்பெடுத்தாடியது.

அந்த அணி ஒதுக்கப்பட்ட 45 ஓவர்களில் 9 விக்கெட்டுகளை இழந்து 138 ஓட்டங்களைப் பெற்றது.

ரெரிமகான் கணேசலிங்கம் 48 ஓட்டங்களைப் பெற்றார்.

சென் ஜோன்ஸ் கல்லூரி அணி 31 ஓவர்களில் 9 விக்கெட் இழப்புக்கு 139 ஓட்டங்களைப் பெற்று ஆட்டத்தில் வெற்றி பெற்றது சென் ஜொன்ஸ்கல்லூரி அணித்தலைவர் ஏ. வாகீசன் அபாரமாக ஆடி 58 ஓட்டங்களைப் பெற்றார்.

சென்றலைட்ஸ் அணிக்கு கே. மனோஜ் குமார் தலைமை வகித்தார்.

## ரமேஷ் வெற்றி

வாஷிங்டன், பெப். 4
அமெரிக்க தேசிய உள்ளக டென்னிஸ் சாம்பியனுக்கான போட்டியின் இரண்டாம் சுற்றில் ஆடும் தகுதியை இந்திய வீரர் ரமேஷ் கிருஷ்ணன் பெற்று இருக்கிறார்.

இவர் நேற்று அமெரிக்க வீரர் ஜெவி முரை 3-6, 6-4, 6-4, புள்ளிகளால் தோற்கடித்தார்.

இப்போட்டியில் சாம்பியனாக வருபவருக்கு 3லட்சத்து 15 ஆயிரம் டாலர் பரிசாக வழங்கப்படும்.

இந்தப் போட்டி டெனஸியில்நடைபெற்று வருகிறது.

## யாழ் கிரிக்கெட் மத்தியஸ்தர் சங்க வருடாந்த கூட்டம்

யாழ்ப்பாணம், பெப். 4
யாழ்ப்பாணம்கிரிக்கெட் மத்தியஸ்தர்கள் சங்கத்தின் வருடாந்தப்பொதுக் கூட்டம் கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ் மத்திய கல்லூரியில் நடைபெற்றது.

யாழ் மாவட்ட மத்தியஸ்தர்கள் பலர் கலந்து கொண்ட இந்த கூட்டத்தில் நடப்பு வருட நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

அவர்களின் விவரம்:-
தலைவர் திரு இசற். சிங்கராயர். செயலாளர் திரு. எஸ். சிவசோதி.
உபதலைவர்கள்: திருவாளர்கள். கே. யதுகுலசிங்கம் பி. மகேந்திரன், ஆர். செல்வரத்தினம், கே. பூபாலசிங்கம், கே. என். வை. மொறிஸ்.
உதவிச் செயலாளரும், பொருளாளரும் திரு. எஸ். உமாகாந்தன்.
நிர்வாகசபை உறுப்பினர்கள் திருவாளர்கள் டி. எம். வேதாபரணம், ஏ. சி. ரி. இராசைடா, ஆர். கனகலிங்கம், எஸ். விமலதாசன், சி. நடேசன்.

யாழ். கிரிக்கெட் மத்தியஸ்தர்கள் சங்கம் ஆரம்பிக்கப்பட்டு 25 ஆண்டுகள் பூர்த்தியாகி இருப்பது குறிப்பிடத்தக்கது.

# வங்கி விதிமுறைகளை கடைப்பிடிப்பதில்லை

## கூட்டுறவுச் சங்கங்கள் பற்றி ஆணையாளர்

யாழ்ப்பாணம், பெப் 5
மக்கள் வங்கியின் விதிமுறைகளைப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் செவ்வனேகடைப்பிடிப்பதில்லை.

இதனாலே இவை தற்காலிக மேலதிகபற்றினைக் கூட (ஓவர்டிராப்) வங்கிகளில் இருந்து பெறமுடியாத நிலையில் உள்ளன.

யாழ்மாவட்டசிரேஷ்ட கூட்டுறவு உதவி ஆணையாளர் திரு.கே.சண்முகலிங்கம் கூட்டுறவு அபிவிருத்திஅலுவலர்களுக்கு அனுப்பி வைத்துள்ள சுற்று நிருபத்தில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

1985 ஆம் ஆண்டு ஜூலைமாதம் தொடக்கம் டிசம்பர்வரைக்கும்உள்ள ஆறு மாதகால நிதி நிலைமையை ஆராயுமாறு அவர் பணித்துள்ளார்.

இக்காலத்தில் நட்டத்தில் இயங்கிய சங்கங்களின் விவரம், நட்டம் அடைந்த தொகை போன்ற விவரங்களையும் அவர் கோரி உள்ளார்.

## இலக்கிய கருத்தரங்கு

யாழ்ப்பாணம், பெப். 5
இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்க யாழ் கிளையின் மாதாந்த இலக்கியக் கருத்தரங்கு ஞாயிறு (9-2-86) காலை 9.30 மணிக்கு ஜும்மா பள்ளி ஒழுங்கையில் உள்ள இலங்கை ஆசிரியர் சங்க மண்டபத்தில் நடைபெறும்.

மல்லிகை இதழ் ஆசிரியர் திரு. டொமினிக் ஜீவா "சமகாலமும் இலக்கியமும்" என்னும் பொருளில் கருத்துரை வழங்குவார்.

சென்ற நோன்மதிக் கருத்தரங்கு நாட்டு நிலவரம் காரணமாக ஒத்தி வைக்கப்பட்டது என்று செயலாளர் திரு. ஐ. சாந்தன் உதயனுக்குத் தெரிவித்தார்.

## மேலும் இருவர் மரணம்

திருகோணமலை, பெப். 5
தம்பலகமம் கிராமத்தில் பட்டிமேடு என்ற இடத்தில் மேலும் 2 தமிழ் இளைஞர்கள் துப்பாக்கிக்குண்டு தாக்கி மரணமானார்கள். தேடுதல் நடந்த சமயம் இச்சம்பவம் இடம்பெற்றது.

அவர்களின் பெயர்கள் வருமாறு;
விசுவலிங்கம் தில்லையம்பலம், வயது 18.
வேலுப்பிள்ளை ஸ்ரீதரன், வயது 20.

தங்கராசா செல்வஸ்ரீ என்ற 8 வயதுச் சிறுமியும் 40 வயதான கணபதிப்பிள்ளை என்பவரும் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் திருமலை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

## மண்வெட்டி விநியோகம்

யாழ்ப்பாணம், பெப் 5
யாழ் மாவட்டத்தில் நிலவி வந்த மண்வெட்டித் தட்டுப்பாட்டினை நீக்க யாழ் கமநல சேவை உதவி ஆணையாளர் திரு. க. பரமலிங்கம் நடவடிக்கை மேற்கொண்டு உள்ளார்.

யாழ் விவசாயிகளுக்கு 11,960 யாழ்ரக மண்வெட்டிகள் கமநலசேவை நிலையங்கள் ஊடாக வழங்கப்படும்.

## தற்கொலை செய்த இளைஞன்

நல்லூர், பெப். 5
நேற்றுக் காலை 8 மணியளவில் கட்டைப்பிராயில் மனநோயாளியான இளைஞர் ஒருவர் கழுத்தில் கம்பியினால் சுருக்கிட்டு தற்கொலை செய்து கொண்டார்.

பொன்னம்பலம் உமாபரன் (20 வயது) என்ற இளைஞரே இவ்வாறு பரிதாப மரணத்தை தழுவிக் கொண்டவராவர்.

இவரது மரண விசாரணையை யாழ் பதில் நீதிவான் திரு. க. கேசவன் நடத்தினார்.

விசாரணையின் முடிவில் தற்கொலை என தீர்ப்பளிக்கப்பட்டது.

## கைலாசபதி நினைவு சொற்பொழிவு

யாழ்ப்பாணம், பெப் 5
இவ்வருடம் பேராசிரியர் கைலாசபதி நினைவுச் சொற்பொழிவை பேராசிரியர் கா. சிவத்தம்பி நிகழ்த்துவார்.

பெப்ரவரி 15 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 1-30 மணிக்கு யாழ் பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் இச்சொற்பொழிவு நிகழும்.

இலங்கை முற்போக்கு இலக்கிய சங்க யாழ் கிளையின் ஆதரவில் இந்த நினைவுச் சொற்பொழிவு நிகழும்.

## காங்கேசனில் சுமுக நிலை

காங்கேசன்துறை, பெப். 5
காங்கேசன்துறை சிமெந்து ஆலையில் ஏற்பட்டிருந்த பரபரப்பான சூழ்நிலை நீங்கி சுமுக நிலை ஏற்பட்டுள்ளது. வேலைகளும் வழமை போல் நடைபெறுகின்றன:

மேற்படி சிமெந்து ஆலையில் கடந்த சில தினங்களின் முன் இராணுவத்தினர் திடீரெனப் புகுந்து தொழிற்சாலை முகாமையாளரையும், பாதுகாப்பு உத்தியோகத்தர்களையும் கைது செய்ததும்.

அதையடுத்து தொழிற்சாலை வட்டாரத்தில் பெரும்பரபரப்புஏற்பட்டு தொழிற்சாலை வேலைகள் ஸ்தம்பிதமடைந் திருந்ததும் குறிப்பிடத்தக்கது.

தற்போது தொழிற்சாலை வட்டாரத்தில் சுமுகநிலை ஏற்பட்டு வேலைகளும் ஆரம்பமாகியுள்ளன.

இருந்தும் தொழிலாளர் மத்தியில் தொடர்ந்தும் அச்சம் நிலவி வருவதாகக் கூறப்படுகிறது.

# பெற்றோர், தங்கையை கத்தியால் குத்திய இளைஞன்

யாழ்ப்பாணம், பெப். 5
மனநோயால் பாதிக்கப்பட்ட இளைஞர் ஒருவர் தனது பெற்றோரையும் தங்கையையும் கத்தியால் குத்தி படுகாயப் படுத்தினார்.

இந்தச் சம்பவம் அல்வாய் வடக்கில் நேற்று நண்பகல் நடந்தது.

தகப்பனார் திரு. நாகரத்தினம் மந்திகை ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டிருக்கிறார்.

தாயார் திருமதி. நாகரத்தினம் (47 வயது) கையில் காயங்களுடனும்—

தங்கை மகாலட்சுமி (23 வயது) தலையில் பலத்த காயங்களுடனும் வயிற்றில் கத்திக்குத்துக் காயத்துடனும் யாழ் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள்.

## ஹேலீஸ் அருகில் 'பயனியர்'

வாஷிங்டன், பெப். 4
விண்வெளி ஆராய்ச்சிக் கலமான 'பயனியர்' ஹேலீஸ் வால் நட்சத்திரத்தை 3 கோடி 8 லட்சம் கிலோ மீட்டரில் இருந்து நேற்று ஆராய்ந்தது.

அதன் பின்னர் 'பயனியர்' நாஸாகட்டுப்பாட்டு நிலையத்துக்குத் தகவல்கள் அனுப்பியது.

ஒரு மாதத்திற்கு முன்பு இருந்ததிலும் பார்க்க ஹேலீஸ் வால் நட்சத்திரம் மிகவும் பிரகாசமாக இருப்பதாகப் 'பயனியர்' அறிவித்துள்ளது.

### வணக்க ஸ்த...

(1-ம் பக்க தொடர்ச்சி)

சுமார் 10 மணி நேரம் அறை ஒன்றில் பூட்டி, தடுத்து வைத்திருந்திருக்கிறார்கள்.

★ வணக்க ஸ்தலங்களின் சுவர்கள் முன்னறிவித்தலின்றி உடைத்து நொருக்கப்பட்டிருக்கின்றன.

★ கடந்த ஞாயிற்றுக்கிழமை மாமாங்கம் பிள்ளையார் கோயில் பகுதியில் தேடுதல் நடத்திய சிப்பாய்கள், கோயில் மதகுருவை தலைமயிரில் பிடித்து இழுத்து மிரட்டியிருக்கின்றார்கள்.

★ மட்டக்களப்பு பகுதியில் தேடுதல் நடத்தும் சிப்பாய்கள் அந்த வேளைகளில் கோயில் மணி அடிக்கப்படுவதை தடைசெய்து வருகிறார்கள்.

— இந்த விடயங்கள் மகஜரில் தெரிவிக்கப்பட்டிருக்கின்றன.

மகஜரில்இதுவரை மட்டக்களப்பு ஆயர். வண. கிங்ஸிலி சுவாம்பிள்ளை, இராமகிருஷ்ண மிஷன் முதல்வர் சுவாமி ஜீவானந்தாஜி, அங்கிலிக்கன் திருச்சபையைச் சேர்ந்த ஜே. சுவாரத்தினம் ஆகியோர் கையெழுத்திட்டிருக்கின்றனர்.

### மலையகத்தில்..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நோக்கி கற்களை உருட்டி விட்டதாகக் கூறப்படுகிறது

ஹட்டனுக்கு அருகில் சிலஇடங்களில் பஸ்களின் மீதுகற்கள் வீசப்பட்டன. ஓரிடத்தில் பிரயாணிகள் வழிமறிக்கப்பட்டு தாக்கப்பட்டனர்.

மலையகத்தில் மூன்று முகாம்களில் சிங்கள, தமிழ், முஸ்லிம் அகதிகள் சுமார் 7 ஆயிரம் பேர் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## படையினருக்கு விருது

கொழும்பு, பெப். 5
சுதந்திர தினத்தை ஒட்டி ஆயுதப்படையினர் 36 பேருக்கு விருதுகள் நேற்று வழங்கப்பட்டன.

இராணுவத்தைச் சேர்ந்தவரான கோப்பரல் எக்கநாயகாவுக்கு அதி உயர் விருதான 'வீர விக்ரம விபூஷண' வழங்கப்பட்டது.

கொக்காவில் சம்பவத்தில் தீவிரவாதிகளைத் தனித்து நின்று போராடியவர் என்ற காரணத்திற்கு இந்த உயர் விருது அவருக்கு வழங்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

ஏனைய 35 பேரில் 5 பேர் மரணமானவர்கள் மரணமானவர்களின் உறவினர்கள் விருதுகளைப் பெற்றுக் கொண்டனர்.

36 பேரில் 18 பேர் இராணுவத்தினர். 11 பேர் கடற்படையினர். மிகுதி ஏழு பேரும் விமானப்படை வீரர்கள்.

### 29 சிப்பாய்....

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

உயிரிழந்தார்கள்.

ஆயுதப் படையினரின் துப்பாக்கி ரவைகள் அடங்கிய பெட்டிகள் எம்மால் கைப்பற்றப்பட்டன.

## நயினாதீவு சாமியார் குருபூசை

யாழ்ப்பாணம்,பெப். 5
நயினை ஸ்ரீலஸ்ரீ முத்துக்குமாரசுவாமியார் அவர்களின் சமாதி அடைந்த 37 ஆவது ஆண்டு பூர்த்தி விழாவும், குருபூசையும், அபிஷேகமும் நாளை வியாழக்கிழமை நயினாதீவில் நடைபெறும்.

நயினாதீவில் உள்ள சோமாஸ்கந்த ஆலயத்தில் நண்பகல் 12 மணியளவில் இவ்வைபவம் நடைபெற ஏற்பாடாகி உள்ளது.

## கிளிநொச்சியில் மயான அமைதி

கிளிநொச்சி,பெப். 5
கிளிநொச்சியில் ஊரடங்கு அமுல் பற்றி நேற்று அறிவித்தல் ஏதும் விடுவிக்கப்படாத போதிலும் சன நடமாட்டம் மிகமிகக் குறைவாகவே காணப்பட்டது. வாகனப்போக்குவரத்தும் குறைந்து இருந்தது.

பதற்றம் நீங்கவில்லை முகாம் பகுதியிலிருந்து அடிக்கடி வேட்டுச் சத்தம் கேட்டபோதும் கிளிநொச்சியில் மயான அமைதியே நிலவியது.

## முல்லைத்தீவில் காயமடைந்த இருவர்

நல்லூர், பெப். 5
முல்லைத்தீவுப் பகுதியில் இருந்து துப்பாக்கிச் சூட்டுக்காயங்களுடன் வந்த இருவர் நேற்று யாழ் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள்.

அவர்கள் விவரம் வருமாறு:-
மனுவல் பெர்னாண்டோ, அன்ரனி பெனடிக் (36 வயது) 3 பிள்ளைகளின் தந்தை. இவருக்கு முதுகில் காயம் ஏற்பட்டுள்ளது. கடற்றொழில் செய்பவர்.

விநாயகர் தர்மராசா (36வயது) கடற்றொழில் செய்பவர் இவருக்கு இரண்டு கைகளிலும் காயம் ஏற்பட்டுள்ளது. இவர் 6 பிள்ளைகளின் தந்தை

### முல்லைத்தீவில்....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஒரு பீரங்கிக் கப்பல் அப்பகுதியை வந்து சேர்ந்ததாக அறியப்படுகிறது.

அதேவேளை ஹெலிக்கொப்டர்களும் விமானங்களும் வந்து சேர்ந்ததாக அறியப்படுகின்றது.

அச்சிடுவோரும் வெளியிடுவோரும்: தஷப்ரு உமா எக்ஸ்போட்ஸ் லிமிட்டெட், 207, மின்சார நிலையவீதி, யாழ்ப்பாணம். அச்சகம்: 15, 2 ஆம் ஒழுங்கை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். வெளியிட்ட திகதி: 05-02-1986

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org